

''உமாவோட காதலர் உன் கிட்டே ரொம்ப பிரியமாத்தானே இருந்தார்... அப்புறம் ஏன்டி அவரை விட்டுட்டே!''

''அடிக்கடி எனக்கு ஒரு நாள் தாஜ்மஹால் கட்டுவேன்னு பயம் காட்டறாருடி!''

-ஆர்.ஜி.அம்பிகைராமன், திசையன்விளை.

''தீபாவளிக்கு உனக்கு புதுப் புடவை எடுமான்னு தினமும் கேட்கிறேன். நாளை நாளைன்னு நாளை தள்ளிட்டே போறியே...ஏன்?''

''பக்கத்து வீட்டு கலாவும், எதிர் வீட்டு மாலாவும் புதுபுடவை எடுத்துக்கட்டும்... அவங்களை விட பத்து ரூபாயாவது அதிக விலையில் நான் புடவை வாங்க நினைத்துள்ளோன்!''

-கு.அருணாசலம், தென்காசி.





''நான் டீ போட்டால் என் மனைவிக்கு பிடிக்காது''

''ஏன் 'டீ' சாப்பிட மாட்டாங்களா?''

''அட அதில்லேங்க! அவளை நான் 'டீ' போட்டு கூப்பிடக் கூடாதாம்!''

-என்.குணசீலன், பட்டுக்கோட்டை.



# மதுரமே

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கே

மதுரா புறப்படுவதற்கு முன் எப்பொழுதும் சொல்லும் ஔவையாரின் இந்த விநாயகர் துதியை மெல்லக் கூறிவிட்டு புறப்பட ஆயத்தமானாள்.

இன்று முக்கியமான ஆபரேஷன் இருக்கிறது சீக்கிரமாக வந்துவிட வேண்டுமென்று ஷ்யாம் சொல்லியிருந்தது சட்டென்று மதுராவிற்கு நினைவிற்கு வந்தது.

''அம்மா நான் கிளம்புகிறேன்''

''மது நீ எழுந்ததிலிருந்து காபி கூட குடிக்கவில்லை என்று நினைக்கிறேன். இந்த வயசில இப்படி வயிற்றைக் காயப்போடலாமா? அந்த ஆண்டவன் என் கண்களைப் பறித்துக் கொள்ளாமல் இருந்திருந்தால் உன் கைகளுக்கே எல்லாம் கொண்டு வந்து கொடுத்திருப்பேன். என் குழந்தை ஒன்னுமே சாப்பிடாமல் கிளம்புவது தெரிந்ததும் என்னால் ஒன்னும் செய்ய முடியாத பாவியாகி விட்டேனே''

அம்மாவின் அழுகை மதுராவை மிகவும் பாதித்தது

''அம்மா! உங்களுக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கேன். நீங்கள் அநாவசியமாக எதற்கும் கவலைப்படக் கூடாது. இன்னிக்கு ஒரு முக்கியமான ஆபரேஷன் இருக்கும்மா, அதுக்கு நான் சீக்கிரமா போகணும்மா. நான் ஆபரேஷன் இருக்கும் நாளில் ஒன்னுமே சாப்பிட மாட்டேன் என்பது உங்களுக்குத் தெரியாதா?

அஞ்சலையிடம் உங்களுக்கு வேண்டியதை எல்லாம் எடுத்துக்

பி.புவனேஸ்வரி

கொடுக்கச் சொல்லியிருக்கேன். மறக்காமல் மாத்திரைகள் சாப்பிட வேண்டும். அஞ்சலையிடம் எந்த மாத்திரை எப்ப சாப்பிடணும்னு விளக்கமா சொல்லியிருக்கேன்.

அம்மா உங்களுக்கு ஒன்னு தெரியுமா?

''என்னை விட அஞ்சலைக்கு உங்களுக்கு எப்பப்போ எந்த மாத்திரை கொடுக்கணும்னு நல்லாவே தெரிஞ்சுருக்கும்மா. பாத்தீங்களா நேரமாகிவிட்டது. ஆபரேஷன் முடிந்தவுடன் வேகமாக வந்து ஒரு பிடி பிடிக்கிறேன். நீங்க கவலைப்படாதீங்க''

சொல்லியபடி சிட்டாகப் பறந்து விட்டாள். மதுரா கைனகாலஜிஸ்ட்டாக இருந்தாலும் ஷ்யாம் மேற்கொள்ளும் ஆபரேஷன்களுக்கு மதுரா அருகில் இருக்க வேண்டும். மதுரா இருப்பது ராசியாக இருப்பதனாலா, இல்லை வேறு ஏதாவது காரணத்தினாலா தெரியவில்லை. மதுரா எவ்வளவோ சொல்லியும் ஷ்யாம் செவிமடுக்கவில்லை.

ஷ்யாம் ஒரு கார்டியாலஜிஸ்ட். தந்தை சிவராசனுக்குப் பிறகு அவர் கட்டிக் காத்து வந்த பெயரையும், நம்பிக்கையையும் ஒரு துளி அப்பழுக்கில்லாமல் காத்து வருபவன்.

வாரத்தில் எல்லா நாட்களுமே மதுராவிற்கு மிகவும் பிஸியான நாட்கள்தான். எப்படியும் தினம் ஒரு நார்மல் டெலிவரி, சிஸேரியன், அதைத்தவிர தினமும் செக் அப்பிற்கு வரும் பெண்கள், மெனோபாஸ் உபாதையுடன் வரும் பெண்கள் என்று அவள் கவனிக்க வேண்டியவை நிறையவே இருக்கும். இதற்கிடையில் ஷ்யாம் மேற்கொள்ளும் ஆபரேஷன்களுக்கு வேறு இவள் போக வேண்டும்.

இன்று கூட ஒரு டெலிவரி கேஸ் அட்டெண்ட் பண்ண வேண்டும். அந்தப் பெண்ணிற்கு வலி ஏற்படாததால் ஒரு நாள் பொறுத்துப் பார்த்துவிட்டு சிசேரியன் செய்யலாம் என்ற முடிவோடு ஷ்யாமின் ஆபரேஷனுக்கு அட்டெண்ட் பண்ண ஓடிவிட்டாள்.

எப்படி இவள் இவ்வளவு சுறுசுறுப்பாக எல்லாவற்றையும் சிரித்த முகத்துடன் ஏற்றுக் கொண்டு வளைய வருகிறாள் என்று எல்லோரும் வியப்பதுண்டு.

அதனால் தானோ என்னவோ இன்று ஒரு ராசியான புகழ் பெற்ற கைனகாலஜிஸ்ட் லிஸ்ட்டில் டாக்டர் மதுராவின் பெயரும் இடம் பெற்றுள்ளது.

டாக்டர் மதுராவிற்கு ஃபீஸ் முக்கியமில்லை என்பதினால் அந்த ஏரியாவில் உள்ள மக்களுக்கு அவள் எப்பொழுதும் செல்லப்பெண்.

காரில் போகும் போது மதுராவிற்கு இன்று என் அம்மா இப்படி தவித்துப் போய்விட்டார்கள் என்றுத் தோன்றியது. ஆபரேஷன் இருக்கும் நாட்களில் அவள் கவனம் எங்கும் சிதறாது. ஆனால் இன்று ஏனோ அம்மா அழுதது அவளுக்கு மனதை ஏதோ செய்தது.

'சே முதலில் ஆபரேஷன், பிறகுதான் எல்லாம்' என்று சுதாரித்துக்



கொண்டு காரை வேகமாக ஓட்டினாள்.

அஞ்சலை தட்டில் இட்லிகளை எடுத்து வைத்து, அதற்குப் பக்கத்தில் சிறிது வெங்காயச் சட்னி, ஒரு கிண்ணத்தில் சிறிது சாம்பார், பிறகு இட்லிப் பொடி போட்டு நல்லெண்ணெயை சேர்த்துக் குழைத்து கமலாவிடம் கொடுத்தாள்.

''அம்மா, பாப்பா தட்டுல மீதியே வெக்கக் கூடாதுன்னு சொல்லிட்டுப் போயிருக்கும்மா. அதனால எல்லாத்தையும் சாப்பிடுங்க. நான் மாத்திரை எடுத்திட்டு வந்து கொடுக்கறேன்''

கமலாவிற்கு இன்று ஏனோ ஒரு இட்லி கூட உள்ளே இறங்க மறுத்தது. பழைய நினைவுகள் அவர் பசியை விரட்டியது. உயிர் வாழ ஏதாவது சாப்பிட வேண்டுமே என்று இரண்டு இட்லிகளை விழுங்கிவிட்டு அஞ்சலையை அழைத்தார்.

''அஞ்சலை எனக்குப் பசிக்கவில்லை, அப்படியும் இரண்டு இட்லிகள் சாப்பிட்டுட்டேன். மாத்திரையைக் கொடுத்திட்டு நீ போ, மிச்சத்தை மதுரா வந்து பார்த்துப்பா''

''ஐயோ, அம்மா, இன்னும் ஒரு இட்லியாவது சாப்பிட்டாத்தான் நான் போவேன். சாப்பிட்டாத்தான் உடம்புல தெம்பு வரும். ஆபரேஷன் பண்ணின கண்ணு நல்லாத் தெரியணுமா வேணாமா?''

'எனக்கு கண்பார்வை வந்து மதுராவைக் கண்ணோடு கண் சந்திக்கும் தைரியம் இல்லையம்மா. நான் இப்படியே இருந்துவிட்டுப் போய்விடுகிறேன்' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டு ''போதும் அஞ்சலை, நீ மாத்திரையைக் கொடு, வலுக்கட்டாயமாக சாப்பிட்டால் வாந்தி வந்துவிடும்'' என்றார்.

அஞ்சலை போனபின்பு ஈஸிசேரில் சாய்ந்துக் கொண்டு உறங்கும் கமலாவிற்கு இன்று உறக்கம் வரவில்லை.

'சனியனே எல்லா இட்லியையும் நீயே முழுங்கினா தீத்தாயும்! ஆர்யாவும் எது சாப்பிடுவாங்க?'

''இல்ல சித்தி, நான் மொதல்ல ரெண்டுதான் சாப்பிட்டேன் இன்னும் ஒன்னு போட்டுக்கலாமேன்னு வந்தேன்'' என்றாள் சிறுமி மதுரா.

'எல்லா போதும் போ எல்லாரும் சாப்பிட்டுட்டு மீதியிருந்தால் வந்து கொட்டிக்கோ'

சரி என்று தலையாட்டிவிட்டு பாதிப் பசியுடன் பிடித்த உணவு கிடைக்கவில்லை என்ற ஏக்கத்துடன் சென்ற மதுராவின் ஞாபகம் கமலாவின் உறக்கத்தைக் குலைத்தது. பார்வையில்லாத கண்களில் நீரை வரவழைத்தது.

ஒன்றா, இரண்டா, இவ்வளவு போராட்டங்களுக்கு இடையிலும் வெற்றி பெற்று இன்று நல்ல நிலைமையில் இருக்கிறாளென்றால் அவள் வணங்கும் விநாயகன் அவளை கைவிடவில்லை என்று நினைத்துக் கொண்டாள்.

'ஐயோ, இந்தப் பெண்ணிற்கு கைமாறு செய்யுமளவிற்கு என் உடலில் தெம்பு இல்லாமல் போய்விட்டது நான் என்ன செய்வேன்?' என்று உள்ளம் அரற்றியது.

'கடவுளே என் மதுரா நன்றாக வாழ வேண்டும் அவள் விரும்பிய வாழ்க்கை அவளுக்குக் கிடைக்க வேண்டும். என் உயிர் போவதற்குள் இது நடக்க வேண்டும். இதை வேண்டிக் கொள்ளுமளவிற்கு எனக்கு அருகதை இல்லாமற் போனாலும் மதுராவிற்கு நீ இதை நிச்சயம் நிறைவேற்ற வேண்டும்' என்று வாய்விட்டே வேண்டிக் கொண்டார்.

மனம் பலவாறு சிந்தித்ததில் நேரமாகிப் போனதைக் கமலா கவனிக்கவில்லை. வாசலில் மதுராவின் கார் வந்து நிற்பதைக் கேட்டவுடன் தான் கமலாவின் சிந்தனை தடைப்பட்டது.

'இவ்வளவு நேரம் ஆகிவிட்டதே. இன்னும் குளிக்கவில்லையே, மதுரா வந்து கேள்விகள் கேட்பாளே, என்ன சொல்லி சமாளிக்கலாம்' என்று மனம் யோசித்தது.

பார்வை இல்லையென்றாலும் வீட்டில் ஓரளவிற்கு எல்லா இடங்களும் கமலாவிற்கு நன்றாகவே பழகி விட்டிருந்தது. சமையலறைக்குச் சென்று தண்ணீர் குடிப்பது, ஹாலில் உள்ள ஊஞ்சலில் அமர்ந்துக் கொள்வது, பாத்ரூமிற்குச் சென்று நிதானமாகக் குளித்துவிட்டு வருவது போன்ற வேலைகளை மதுராவே மெல்ல மெல்ல கமலாவிற்குத் தன்னம்பிக்கை வரவேண்டுமென்பதற்காய் பழக்கி விட்டிருந்தாள்.

பாத்ரூமில் வெந்நீர் பதமாக விளாவி வைத்திருந்தால் மெதுவாக சென்றுக் குளித்துவிட்டுப் பிறகு பூஜையறையில் பூக்குவளையில் இருக்கும் சில பூக்களை இறைவனுக்குப் போட்டுவிட்டு ஈஸிசேரில் வந்து உட்கார்ந்துக் கொள்வார்.

அம்மா தினம் செய்யும் அவரது வேலைகளை சரிவர முடித்தாரா, மாத்திரை, மருந்து நேரத்திற்கு எடுத்துக் கொண்டாரா, போன்றவற்றைத் தெரிந்து கொள்வதற்காகவே கமலாவிற்கு செல்போன் ஒன்றையும் வாங்கிக் கொடுத்திருந்தாள்.

ஆஸ்பத்திரியில் இருந்து அவ்வப்போது செல்லுக்கு அடித்து அம்மா எப்படி இருக்கிறார்கள் என்று மதுரா விசாரித்துக் கொள்வாள். இன்று ஆபரேஷன் ஆதலால் மதுரா போன் செய்யவே இல்லை.

கமலாவும் ஏதேதோ யோசித்தால் அவர் எப்போதும் செய்யும் வேலைகள் தடைப்பட்டுப் போயின.

மதுரா காரை நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்தாள். 'அம்மா, அம்மா ஆபரேஷன் சக்ஸஸ். ஷ்யாம் என்ன அருமையாக செய்தார் தெரியுமா? பை-பாஸ் சர்ஜரி இன்று. அந்த நோயாளி வயதானவராக இருந்ததால் ஷ்யாம் மிகவும் யோசித்தார். ஆனால் அவர் நினைத்ததை விட எல்லாம் நல்லபடியாக முடிந்தது.

அம்மா எனக்கு மிகவும் பசிக்கிறது. நான் போய்க் குளித்துவிட்டு





வந்து முதலில் சாப்பிட வேண்டும். நீங்கள் சாப்பிட்டீர்களா? மாத்திரை எடுத்துக் கொண்டீர்களா?''

''ம்.... ம் சாப்பிட்டேன் மதும்மா, நீ போய் முதலில் குளித்துவிட்டு வா. போ''

''அம்மா ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க? இன்னும் குளிக்கவே இல்லையே, எம்மா? என்னம்மா ஆச்சு?''

''மதுா என் செல்லமே! இந்த உபசரிப்புக்கெல்லாம் நான் அருகதை அற்றவளடி'' என்றுத் தேம்பினார்.

''அம்மா, எம்மா பழசையே திரும்பத் திரும்ப நினைக்கிறீங்க? இந்த வீட்டில பழைய நினைவே இருக்கக் கூடாதுதுன்னு உங்களுக்கு எத்தனை தடவ சொல்லியிருக்கேன், ப்ளீஸ் எனக்காக விட்டுடுங்கம்மா''

அம்மாவைத் தேற்றிவிட்டு மது குளிக்கச் சென்றாள். அம்மாவைப் பழசை நினைக்காதே என்று சொன்னவளின் மனம் பழைய நினைவுகளை மெல்ல அசைபோட ஆரம்பித்தது.

## 2

சிவராமன், விசாலட்சுமி தம்பதியருக்குப் பிறந்த செல்வப் பெண் மதுரா.

சிவராமன் பிரபல ஸ்ரீனிவாசன் நர்ஸிங் ஹோமில் தலைமை ஃபார்மஸிஸ்ட் ஆக நல்ல சம்பளத்தில் இருந்தார். திருமணமாகி சில வருடங்கள் குழந்தை இல்லாமல் பிறகு பிறந்தவள் மதுரா. விசாலாட்சி, மகள் மதுராவின் மேல் உயிரையே வைத்திருந்தார். குழந்தை மிகவும் நற்பண்புகளோடு வளரவேண்டும் என்பதைக் குறிக்கோளாகவே கொண்டிருந்தார்.

அவ்வப்போது ''மதுக்குட்டி' நீ எப்பவும் சிரிச்சுக்கிட்டே இருக்கணும், யாராவது எதாவது சொன்னால் கூட கோபமே படக்கூடாது. நீ வளர்ந்து பெரிய பெண்ணான உடனே டாக்டருக்குப் படிக்கணும். நோயின்னு வர்றவங்களுக்கு நல்லா வைத்தியம் பார்க்கணும்'' என்று சொல்லிக் கொண்டே இருப்பார்.

அதனால் தானோ இல்லை இயற்கையிலேயோ மதுரா மிகவும் புத்திசாலியாக, பொறுமைசாலியாக எதிலும் அதிக ஆசைப்படாதவளாகவே வளர்ந்தாள்.

அவள் ஆசைப்பட்டதெல்லாம் அம்மா சொன்னபடி டாக்டராகி சேவை செய்ய வேண்டுமென்று தான்.

பார்ப்பவர் கண்படும்படி வாழ்ந்துக் கொண்டிருந்த குடும்பத்தில் பேரிடி விழுந்தது. ஆம் விசாலாட்சியை கர்ப்பப்பை புற்றுநோய் தாக்கியது. சிவராமனும் பார்க்காத வைத்தியம் இல்லை. கர்ப்பப்பையை எடுக்க வேண்டும் என்றார்கள். அதன்படி அவர் வேலை பார்த்த நர்ஸிங்ஹோமில் அட்மிட் பண்ணி அந்த ஆபரேஷனையும் செய்தார். ஆனால் எதிலும் பல



னின்றி ஒரு நாள் விசாலாட்சி இறந்துப் போனார்.

எத்தனை நாட்கள் சிவராமன் தனியாக வீட்டை நிர்வகிப்பார்? மதுரா ஒன்றும் அடம் பிடிக்கும் குழந்தையல்ல, சூழ்நிலைக்கேற்ப மாற்றிக் கொள்ளும் பழக்கம் அவளுக்கு அந்தச் சிறிய வயதிலேயே இருந்தாலும் குடும்பத்தின் பெரியவர்களின் வற்புறுத்தலின் பேரில் கமலாவைக் கைபிடித்தார்.

பார்க்க சுமாராக, நிறம் மட்டமாக இருந்தாலும் குடும்பப் பாங்கானவள். குடும்பத்தை, முக்கியமாக மதுராவை நன்கு கவனித்துக் கொள்வாள் என்றெல்லாம் சொல்லி சிவராமனுக்கு கமலாவை மணமுடித்து வைத்தனர்.

திருமணத்திற்கு முன்பு இக்குணங்களையெல்லாம் கேள்விப்பட்டதோடு சரி. ஒரு நாளும் அதன்பிறகு அவர் கண் கூடாகப் பார்க்கவில்லை. அது என்னவோ, கமலாவிற்கு எடுத்த எடுப்பிலேயே, எலுமிச்சம் பழ நிறத்தில், மூக்கும் முழியுமாக கொழு கொழு வென்றிருந்த மதுராவைப் பிடிக்காமல் போனது.

ஆனால் மதுரா, கமலா, அம்மா விசாலாட்சி இருந்த இடத்திற்கு வந்திருப்பவள் என்று அப்பா சிவராமன் சொன்னதனால் கமலாவை அம்மா அம்மா என்று அழைத்தபடி அவளையே சுற்றி வந்தாள்.

ஒரு நாள் கமலா ''யாருடி உனக்கு அம்மா'' உன் அம்மா போய் சேர்ந்தாச்சு. இனிமே நீ என்னை சித்தின்னுதான் கூப்பிடணும். புரிஞ்சுதா'' என்று மிரட்டினாள்.

அதிலிருந்து மதுரா கமலாவை 'சித்தி' என்றே அழைக்கலானாள்.

கமலாவிற்குப் பிறந்தவர்கள்தான் நித்யாவும், சூர்யாவும். உருவத்தில் தான் தாயைப் போலவே இருந்தார்கள் என்றால், குணத்திலும் அச்சு அசல் தாயைப் போலவே இருந்தனர் இருவரும்.

நித்யாவிற்கு மதுராவைப் போலத் தான் சிவப்பாக இல்லை, அந்த அடர்ந்த கருங்கூந்தல் தனக்கு இல்லை என்பதில் பொறாமை நிறையவே இருந்தது. வாழ்க்கையில் தன் ஜென்ம விரோதி மதுரா என்பது போல் நடந்துக் கொண்டாள்.

மதுராவோ அதற்கு நேர்மாறையாகத் தம்பி, தங்கையிடம் மிகவும் அன்பு கொண்டிருந்தாள். நித்யா பல சந்தர்ப்பங்களில் மதுராவை கமலாவிடம் காட்டிக் கொடுத்து, திட்டு வாங்க வைத்திருந்தாலும் மதுரா ஒரு பொழுதும் நித்யாவை வெறுத்ததில்லை. அவள் தாய் கூறியிருந்தபடி எல்லோரிடத்திலும் அன்பு காட்டுபவளாகவே இருந்தாள்.

நித்யாவின் தொந்தரவு இவ்வாறு இருக்க சூர்யாவோ அவளை வேறு விதமாகத் துன்புறுத்தி வந்தான். மதுரா கையில் என்ன தின்பண்டம் வைத்திருந்தாலும் அதைப்பிடுங்கித் தின்றுவிடுவான். என்னதான் மதுரா எதையும் பொறுத்துப் போகக் கூடியவள் என்றாலும் அவளும் சிறுமியல்லவா? தின்பண்டம் பறிபோனவுடன் அழுகை முட்டும். ஆனால் சித்தியின் அதட்டலை நினைத்தால் வந்த அழுகையும் நின்று விடும்.

எல்லாவற்றிலும் சிறந்து விளங்கிய மதுரா படிப்பில் விட்டு விடுவாளா? மிகவும் நன்றாகவேப் படித்தாள். அம்மாவின் ஆசைப்படி டாக்டராகி விட வேண்டும் என்று வெறியோடு படித்தாள்.

கமலாவோ, மதுராவை ஆயிரம் கரித்துக் கொட்டினாலும், சிவராமன் முன்னிலையில் ஒன்றும் சொல்ல மாட்டாள். மதுராவும் அப்பாவிடம் எதுவும் சொல்ல மாட்டாள். அதனால் சிவராமனுக்கு கமலா மதுராவை முழு மனதோடு பார்த்துக் கொள்வதில்லை என்பது தெரிந்தாலும், இந்த அளவுக்கு மதுரா துன்புறுத்தப்படுகிறாள் என்பது தெரியாது.

நித்யாவும் படிப்பில் கெட்டிக்காரியாக விளங்கினாள். மதுராவை விட மிகவும் சிறியவள் நித்யா. அவள் வாங்கும் மதிப்பெண்களோடு ஒப்பிட்டுப் பேசுவாள் கமலா. வீட்டு வேலை செய்வதற்கு வேலைக்காரி இருந்தாலும் மதுராவை சின்னச் சின்ன வேலைகளைச் செய்யச் சொல்லி ஏவிக் கொண்டேயிருப்பாள்.

எப்பொழுது படிக்க உட்கார்ந்தாலும் ஏதாவது ஒரு வேலை சொல்வாள். மதுராவும் அலுக்காமல் அதை முடித்துவிட்டு வந்துப் பாடத்தைத் தொடர்வாள். கமலாவிற்கு தன் மகள் படிக்கும் பள்ளியில் மதுரா படிப்பது சிறிதும் பிடிக்கவில்லை. மதுரா வேறு நன்றாகப் படிக்கிறாள். நல்ல பள்ளி வேறு. ஒருவேளை அவள் எண்ணம் போலவே நன்றாகப் படித்து டாக்டராகிவிட்டால்? அந்த நினைப்பே கமலாவிற்குப் பிடிக்கவில்லை. எப்படியாவது எதையாவது சொல்லி மதுராவை அந்தப் பள்ளியிலிருந்து வேறு பள்ளிக்கு மாற்றிவிட வேண்டும் என்று திட்டம் போட்டாள்.

மெல்ல சிவராமனிடம் பேச்சை ஆரம்பித்தாள். ''என்னங்க, எனக்கு முடியவே இல்லீங்க. மூணு பிள்ளைங்களையும் பாத்து கவனிச்சு ஸ்கூலுக்கு அனுப்பறதுக்குள்ள போதும் போதும்னு ஆகிடுது. நம்ம மதுராவும் ஓரளவு பெரிய பொண்ணா இருக்கா. அவள நம்ம வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கற ஸ்கூல்ல சேத்திடுங்க ஸ்கூல் விட்டு சீக்கிரம் வந்தால் எனக்கும் கொஞ்சம் கூட மாட ஒத்தாசையா இருப்பா. அவ்வளவு தூரம் அவ பஸ்ல போய்ட்டு வரதும் மிச்சம்'' என்றாள்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த மதுராவிற்கு ஒரு நிமிடம் மூச்சே நின்று விடும் போலிருந்தது. அந்தப் பள்ளியை விட்டு வேறு பள்ளியை நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை அவளால். படிப்பிற்கே உலை வைப்பார்கள் என்று அவள் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.

அந்த ஸ்கூலின் டீச்சர்கள் அவள் நன்றாகப் படிப்பதனால் அவளிடம் மிகவும் பாசமாக இருந்தனர். எஸ்.எஸ்.எல்.சியில் முறைப்படி கோச்சிங் கொடுத்தா மாநில அளவில் ரேங்க் வாங்கி விடுவாள் என்ற நம்பிக்கையோடு இருந்தனர். மதுராவிற்கும் அது நன்றாகவே தெரியும்.

தந்தை சிவராமன் என்ன சொல்லப் போகிறாரோ என்று பயத்துடன் கேட்டுக் கொண்டிருந்தாள்.

சிவராமன் ''அதெல்லாம் ஒன்னும் வேண்டாம் விசாலம் இருந்



தப்போ, மதுவ அந்த ஸ்கூல்லதான் படிக்க வெக்கணும்னு சொல்லிட்டே இருப்பா. இப்ப எதுக்கு ஸ்கூல மாத்தணும்? நித்யா, சூர்யா வேற சின்ன பசங்க மது பார்த்து பத்திரமா கூட்டிட்டு வர்றா. அதனால மது அந்த ஸ்கூல்லயே படிக்கட்டும். உனக்கு ஒத்தாசைக்கு ஆள் வேணும்னு படிக்கற பொண்ணைப் போய்க் கூப்பிடுறியே. நம்ம வேலைக்காரி கனகத்துக்கிட்டே போய்ச் சொல்லு. அவள் பணம் கூட வேணும்னு கேட்டா நான் தர்றேன் போ'' என்றார்.

அதைக் கேட்டதும் மதுராவிற்கு கோடி ரூபாய் கையில் கொடுத்தது போல் இருந்தது. அப்பாடி என்று நிம்மதியாக மூச்சு விட்டாள்.

கமலாவிற்குதான் மிகவும் ஏமாற்றமாயிருந்தது. சரி இன்னொரு சந்தர்ப்பத்தில் பார்க்கலாம் என்று நினைத்துக் கொண்டாள்.

## 3

குழந்தை மதுரா குமரியானாள். ஏற்கனவே மஞ்சள் கலந்த சிவந்த நிறமுடையவள். இப்பொழுது இன்னமும் அழகாகக் காணப்பட்டாள். அவள் அழகுக்கு அழகு சேர்ப்பது போல இருந்தது, அவளது நீண்ட கருங்கூந்தல். பாவம் அவளை உட்கார வைத்து ஒரு நாள் கூட தலையை வாரிப் பின்னி விட்டதில்லை. அவளது சிற்றன்னை தன் மகளுக்கு அத்தகைய நீண்ட கூந்தல் இல்லையே என்று மிகவும் ஆதங்கப்பட்டாள்.

மது சிரிக்கும்போது கன்னத்தில் விழும் குழி அவளுக்கு மிகவும் அழகாக இருக்கும். ஆனால் அடிக்கடி சிரித்து மகிழ்வதற்குதான் அவளுக்குக் கொடுத்து வைக்கவில்லை.

சிவராமன் என்ன ஆனாலும் சரி, இரவு உணவை பிள்ளைகளோடு தான் சாப்பிடுவது வழக்கம் கொண்டிருந்தார். அதனாலேயே மற்ற எல்லோருக்கும் கிடைத்தது மதுவிற்கும் கிடைத்தது. மதிய உணவு சுமாராக இருந்தாலும் இரவு உணவு நன்றாகவே சாப்பிட்டு விடுவாள். அதனால் உடல் வாகு மெலிவாக இல்லாமல் சற்றுப் பூசிய வாகிலேயே வசீகரமாகக் காணப்பட்டாள்.

எஸ்.எஸ்.எல்.சி யில் அவள் பள்ளியில் எதிர்பார்த்ததுபோல் மாநில அளவில் ரேங்க் வராவிட்டாலும், நன்றாகவே மதிப்பெண்கள் வாங்கித் தேறியிருந்தாள். ஆனாலும் மாநில அளவில் ரேங்க் வரவில்லையே என்று மிகவும் வருத்தப்பட்டாள். அவளது பள்ளி ஆசிரியர்கள் 'இந்தத் தேர்வில் இல்லையென்றால் என்ன? ப்ளஸ் டூ தேர்வில் வாங்கினால் போயிற்று. ஆனாலும் இந்த வருடத்தில் பள்ளிக்கே முதல் மாணவியாக வந்திருக்கிறாய் அல்லவா? அதை நினைத்து சந்தோஷப்பட வேண்டும்' என்று சொல்லித் தேற்றினர்.

சிவராமன் மிகவும் மகிழ்ந்து போனார். மறைந்த மனைவி விசாலாட்சியை நினைத்துக் கொண்டார். ஆனால் டாக்டருக்குப் படிக்க வைக்க

வேண்டும் என்றால் நிறைய செலவாகுமே. நித்யாவும் நன்றாகப் படிக்கிறாள். அவளையும் நல்ல படிப்பு படிக்க வைக்க வேண்டும். ஒருக்கால் அவளும் டாக்டருக்குத்தான் படிப்பேன் என்று சொன்னால் மறுக்க முடியாதே என்று பலவாறு யோசனை செய்தார். அந்த நேரம் பார்த்து அங்கு வந்தாள் கமலா.

"என்னங்க, மது நல்ல மார்க் வாங்கியிருக்கிறது சந்தோஷமாத்தான் இருக்கு. ஆனா மேல என்ன குரூப் சேர்க்கப் போறீங்க? அது ஏதோ தென்னக் கொழுந்த விஷயம் புரியாம டாக்டருக்குத்தான் படிக்கப் போறேன்னு கனவு கண்டுகிட்டுத் திரியுது. நீங்களும் அது பேச்சக் கேட்டுக்கிட்டு எக்கச்சக்கமா மாட்டிக்காதீங்க. அதுக்கெல்லாம் நிறைய செலவாகும். நித்யாவும், மதுவப் பாத்திட்டு நானும் டாக்டராகப் போறேன்னு சொல்லிக்கிட்டிருக்கு. அடுத்தது சூர்யா வேற இருக்கான். ஆம்பளப் பையனாச்சே, பணம் குடுத்தாவது நல்லாப் படிக்க வைக்க வேண்டாமா? இல்ல நான் மதுவ டாக்டருக்குத்தான் படிக்க வெக்கப்போறேன்னு சொன்னீங்கன்னா, நித்யாவையும் அதே மாதிரி படிக்க வெக்கணும். அதுக்குத்தான் சொல்றேன், காமர்ஸ் குரூப்பில் சேத்து விட்டீங்கன்னா, பி.ஏ., பி.காம். னு எதாவது ஒரு டிகிரி படிச்சிட்டு வேலைக்குப் போறதுன்னா போகட்டும். அதனால நல்லா யோசிச்சு முடிவு எடுங்க" என்றாள்.

சிவராமனுக்கும் கமலா பேசியது நியாயம் தானோ என்றுத் தோன்றியது. தனது சம்பளத்தில் மூன்று பிள்ளைகளுக்கும் படிப்பதற்கு நிறைய செலவு செய்ய முடியுமா என்று யோசித்தார்.

மார்க் ஷீட் வாங்கிக் கொண்டு வீடு திரும்பிய மகளிடம் அது பற்றி மெதுவாகப் பேச ஆரம்பித்தார்.

"மது ரொம்ப நல்ல மார்க் எடுத்திருக்கடா. எனக்கு ரொம்பவும் சந்தோஷமா இருக்கு".

"அப்பா, நான் ஸ்டேட் ரேங்க் வாங்கணும்னு படிச்சேம்ப்பா. அது இல்லாமல் போயிருச்சேன்னு எனக்கு வருத்தமா இருக்குப்பா. ஆனாலும் பரவாயில்ல. ப்ளஸ் டூவில் வாங்க கண்டிப்பாக முயற்சி பண்ணுவேன். அப்பா அப்ளிகேஷன் ஃபார்ம் வாங்கிட்டு வந்திட்டேன். ஃபில்லப் பண்ணியும் வச்சிட்டேன் இதுல ஒரு கையெழுத்துப் போடுங்கப்பா" என்றாள்.

சிவராமனுக்கு, எப்படி மதுவிடம் 'நீ காமெர்ஸ் குரூப் எடுத்துக் கொள்' என்று சொல்வது, அதுவும் அருமையாக மார்க் வாங்கியிருக்கும் பெண்ணிடம், ஆசையாக மேற்படிப்பு படிக்க கனவு கண்டு கொண்டிருக்கும் பெண்ணிடம் எப்படி சொல்வது என்று குழம்பினார். மகளை மெல்ல அழைத்தார்.

"மதும்மா, நீ புத்திசாலிப் பொண்ணு. அப்பா சொல்றது நல்லாப் புரிஞ்சு நடந்துப்ப, உன்னை காமெர்ஸ் குரூப்பில சேர்க்கலாம்னு இருக்கேன். நீ நெனைக்கிற மாதிரி டாக்டருக்குப் படிக்க வைக்க அப்பாகிட்ட சக்தி இல்லடா. எனக்குத் தெரியும் நீ கண்டிப்பாக நல்லாப் படிக்க மெடிக்கல்



ஷீட் வாங்கிடுவேன்னு மூணு புள்ளைங்களையும் அதே மாதிரி படிக்க வைக்க முடியுமா? சொல்லு. அதனால நீ காமெர்ஸ் எடுத்துப் படி. நாட்டுல எது மாறினாலும் பொருளாதாரம், கணக்கியல், காமெர்ஸ் இதெல்லாம் என்றுமே நிரந்தரம்மா. ஒரு தொழில் தொடங்கி வெற்றி பெற்றால் உடனே அந்தக் கம்பெனியின் பேலன்ஸ் ஷீட்டை 'டும் ரெடி பண்ணணி வைக்கணும் தெரியுமா? எவ்வளவு அட்வான்டேஜ் இருக்குத் தெரியுமா? பி.காம். படிச்சிட்டு எதாவது ஒரு வேல பார்த்துக்கிட்டே கூட எம்.ஏ.படிக்கலாம். நீயும் சுலபமா பாஸ் பண்ணிடுவ" என்றார்.

அதைக் கேட்டதும் மதுராவிற்கு பூமி நழுவி காலடியில் விழுந்தது போலிருந்தது. எத்தனை முறை தனது நோட்டுகளில் டாக்டர் மதுரா என்று எழுதி அழகு பார்த்திருப்பாள். தனது உயிர் மூச்சு என்னவோ டாக்டராவது தானே அதில் இடி விழும் போலிருக்கிறதே என்று பரிதவித்தாள்.

இதுவரை அப்பா சொல்வதை மீறி ஒரு முறை கூட நடந்துக் கொண்டதில்லை. ஆனால் அதற்கென்று இப்பொழுது சும்மா இருந்துவிட அவள் மனம் ஒப்பவில்லை.

"அப்பா டாக்டராவது நான் சின்னக் குழந்தையாக இருக்கும் போதிலிருந்து என் மனசுக்குள் கட்டி வச்சிருக்கிற கோட்டை டாடா. அப்பா தயவு செஞ்சு என் ஆசையை நிறைவேத்தி வைங்கப்பா. எனக்கு வேற எதுவும் வேண்டாம். எனக்கு கல்யாணம் கூட செஞ்சு வெக்க வேண்டாம்ப்பா. ஆனா நான் கண்டிப்பா டாக்டராகணும்ப்பா. தயவு செஞ்சு என்ன சயின்ஸ் குரூப்பில சேத்து விடுங்கப்பா" என்று கூறி கதறி அழ ஆரம்பித்தாள்.

சிவராமனுக்கு மதுரா அழுவதைப் பார்த்தவுடன் நெஞ்சே வெடித்து விடும் போல இருந்தது. மனதிற்குள் ஏதோ முடிவு செய்தவராக 'மது உன் இஷ்டம் போல இப்போ சயின்ஸ் குரூப் எடுத்துக்கோ. இன்னும் இரண்டு வருஷம் இருக்கு இல்ல. அப்புறம் பார்த்துக்கலாம். கொண்டா, அப்ளிகேஷன்ல கையெழுத்துப் போட்டுக் குடுக்கறேன்" என்றார்.

மதுவிற்கு வயிற்றில் பால் வார்த்தாற் போலிருந்தது. இதற்காகவே இன்னும் நன்றாகப் படிக்க வேண்டும் என்று முடிவு செய்தாள்.

கேட்டுக் கொண்டே அங்கு வந்த கமலாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

"எங்க நான் எத்தனை தடவ படிச்சுப் படிச்சு சொன்னேன். நமக்கு இருக்கறது என்ன இவ ஒருத்திதானா? மத்த ரெண்டு புள்ளைங்களையும் கொண்டு அனாத ஆஸ்ரமத்தில் கொண்டு சேத்திடுங்க. இவ மட்டும் நிம்மதியாக டாக்டருக்குப் படிக்கட்டும். அவ ஏதோ அழுதுட்டான்னா உடனே எல்லாத்துக்கும் சரின்னுடுவீங்களா? நாளைக்கி ரோடுல போறவன் எவனையாவது இழுத்துக்கிட்டு வந்து இவனைத்தான் கட்டிப்பேன்னு அழுதா அதுக்கு ஒத்துப்பீங்களா?

எனக்கு தெரியாது அவளை காமெர்ஸ் குரூப்பில சேக்கலன்னா நானும் எம்புள்ளைங்களும் எங்கயாச்சும் போறோம். நீங்க ரெண்டு பேரும் சந்தோ

ஷமா இருக்க'' என்றாள்.

சித்தி சொன்னதைக் கேட்டு மதுரா விக்கித்துப் போய் நின்றாள். 'எவ்வளவு சாதாரணமா என்னோட நடத்தையைப் பற்றி சொல்லிட்டாங்க' என்னிக் குமைந்தாள்.

சிவராமனுக்கு எங்கிருந்து அவ்வளவு கோபம் வந்ததோ தெரியவில்லை. உரத்தக் குரலில் பேசலானார்.

''இங்கப்பாரு கமலா. எனக்குத் தெரியும். எது எது எப்ப எப்படிச் செய்யணும்னு எனக்கு நல்லாவேத் தெரியும். எம் புள்ளைங்களுக்கு நான் எப்பவும் நல்லது செய்வேங்கிற நம்பிக்கை எங்கிட்ட இருக்கு. என் தலைய அடகு வெச்சாவது மூணு பேரையும் நல்லாப் படிக்க வெப்பேன். நீ என் வீணா கெடந்து புலம்பற. இனிமே பேசும் போது வார்த்தையை அளந்துப் பேசு. மதுராவப் பாரு. உம் பேச்சக் கேட்டு அப்படியே வாயடச்சுப் போயி நிக்கறா போயி வேலையப்பாரு'' என்றார்.

கமலா இதை முற்றிலும் எதிர்பார்க்கவில்லை. சிவராமன் பேசியதை மீறவும் அவளுக்கு தைரியம் இல்லை. மதுவை நினைத்துப் பல்லைக் கடித்துக் கொண்டாள்.

இரு இரு இன்னும் ரெண்டு வருஷம் இருக்கே. அதுக்குள்ளப் பார்த்துக்கறேன். நீ எப்படி மெடிக்கல் காலேஜ் சேரப் போறன்னு நானும் பார்க்கத்தானப் போறேன் என்று கருவியபடி நகர்ந்தாள்.

மதுராவிற்கு சித்தி பேசியதைக் கேட்டவுடன் மீண்டும் பயம் தலை தூக்கியது. பிறகு அப்பா இருக்கிறார் பார்த்துக் கொள்வார் என்று நம்பிக்கைக் கொண்டாள்.

## 4

இந்த வருடம் மதுவின் கனவை நனவாக்க நிர்ணயிக்கும் வருடம். ஆம் இந்த வருடம் மதுரா ப்ளஸ்டு பரீட்சை எழுதப் போகிறாள். இம்முறை எப்படியாவது மாநில அளவில் ரேங்க் வாங்கியே ஆக வேண்டும் என்ற லட்சியம் அவளிடம் இருந்தது.

கமலா மதுராவைப் படிக்க விடாமல் ஏதாவது சொல்லப் போகிறாளே என்று சிவராமன் ஆஸ்பத்திரியில் இருந்து தினமும் சீக்கிரமாகவே வீடு திரும்பினார். மதுவையும் அழைத்து ''மது, எப்பப் பார்த்தாலும் படிக்க கிட்டே இருக்கியே, உடம்புக்கும் கொஞ்சம் ஓய்வு இருக்கணும்மா. ஹார்லிக்ஸ் மாதிரி ஏதாவது குடிக்கறியா? அடிக்கடி டீ குடிக்காதே பித்தம் அதிகமாகி விடும்!'' என்று மிகுந்த அன்போடு கூறுவார்.

''இல்லப்பா. நான் ஒண்ணும் ஓய்வு, ஒழிச்சல் இல்லாம படிக்கல. ஏற்கனவே படிச்ச பாடங்களை ரிவிஷன் தான் பண்ணிக்கிட்டு இருக்கேன். ஸ்கூல்லயே ஸ்பெஷல் கிளாஸ் எல்லாம் வெக்கறதனால எல்லாத்தையும் அங்கேயே முடிக்கறேன். அடுத்த மாசத்திலேர்ந்து என்ட்ரன்ஸ் எக்ஸாமுக்கு வேற கோச்சிங் குடுக்கறாங்கப்பா. அதனால ட்யூஷன், அது



இதுன்னு எங்கேயும் அலைய வேண்டாம். நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்கப்பா. நான் ரொம்ப ஸ்ட்ரெயின் பண்ணிக்க மாட்டேன்'' என்றாள்.

பரீட்சையும் ஆரம்பமாயிற்று. மது எதிர்பார்த்தபடியே நன்றாக எழுதினாள். அதனால் மிகவும் சந்தோஷமாக இருந்தாள். பள்ளியிலும் ஆசிரியர்களிடத்தில் மிகுந்த நம்பிக்கையோடு மாநில அளவில் கண்டிப்பாக ரேங்க் வரும் என்று சொன்னாள்.

தந்தையிடமும் அதையே கூறினாள். ப்ளஸ் டூ பரீட்சை முடிந்த ஒரு வாரத்தில் என்ட்ரன்ஸ் தேர்வும் நடந்தது. அதை எழுதிவிட்டு வரும்போது தான் அந்த விபரீதம் நடந்தது. பரீட்சை எப்படி எழுதினாள் என்பதைத் தெரிந்துக் கொள்வதற்காக சிவராமன் அன்று சீக்கிரமே வந்திருந்தார். வந்து சிறிது நேரத்தில் நெஞ்சு வலிப்பது போல் உணர்ந்து கமலாவை சிறிது தண்ணீர் கொண்டு வரும்படி சொன்னார்.

ஆனால் சிறிது நேரத்தில் வலி அதிகமாகி உடம்பெல்லாம் வியர்வை வெள்ளமாயிற்று. அப்பொழுதுதான் மது உள்ளே நுழைந்தாள்.

கமலா ''ஐயோ, என்னங்க செய்யுது? நான் வேணா, டாக்டருக்கு போன் செய்யவா?'' என்று கேட்க தற்கு பதில் சொல்லும் நிலையில் அவர் இல்லை. மது உடனே வெளியில் ஓடிச் சென்று ஒரு ஆட்டோவை அழைத்து வந்து சிவராமனை அவர் வேலை பார்க்கும் 'ஸ்ரீனிவாசன் நர்ஸிங்ஹோமிற்கு' அழைத்துச் சென்றாள்.

உடனடியாக 'ஈ.ஸி.ஜி.' எடுத்துப் பார்த்ததில் சிவராமனுக்கு 'ஹார்ட் அட்டாக்' வந்திருப்பது தெரிந்து ஐ.ஸி.யு.வில் அட்மிட் செய்தார்கள். மதுவிற்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. டாக்டர் ஸ்ரீனிவாசன் தான் அவளைத் தேற்றினார்.

''இதோ பாரும்மா, சிவராமனுக்கு வந்திருப்பது மைல்டு அட்டாக் தான். இருந்தாலும் அப்ஸர்வேஷனில் இருக்கட்டுமேன்னு தான் ஐ.ஸி.யுல சேர்த்திருக்கோம். மருந்து, மாத்திரை எல்லாம் உடனடியாக கொடுத்தாச்சு. அதனால நீ ஒண்ணும் கவலைப்படாத.

இன்னிக்கு காலைல தான் உன்னப்பத்தியும் உன்ன எப்படியாவது மெடிக்கல் காலேஜ்ல சேக்கணும்னு எங்கிட்ட வந்து சொன்னான். நானும் என்னால முடிஞ்ச உதவி செய்யறேன்னு சொன்னேன். அதுக்குள்ள இப்படி படுத்துட்டான். இட்ஸ் ஆல் ரைட் எல்லாம் சரியாகிவிடும்.

அம்மாவக் கூட கூட்டிட்டு வரலியா. போய் அவங்கள தைரியமா இருக்கச் சொல்லு. சியர் அப் மை டியர் ஸ்மார்ட் கேர்ள்'' என்று ஆறுதல் கூறினார்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த ஷ்யாம் 'யாருடாடி அது' என்று கேட்டான்.

ஷ்யாம் டாக்டர் ஸ்ரீனிவாசனின் ஒரே மகன். மிகவும் புத்திசாலி. இப்பொழுதுதான் எம்.பி.பி.எஸ். முடித்துவிட்டு உயர் படிப்புக்கான பரீட்சைக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். தந்தையைப் போலவே இருதய நோய் நிபுணர் ஆக வேண்டும் என்ற எண்ணம் இருந்ததால் எம்.டி. அல்லது

எம்.எஸ். கார்டியாலஜி படிக்க வேண்டும் என்ற லட்சியம் அவனுக்கு இருந்தது.

அதனால் ஸ்ரீனிவாசன் மகனை தினமும் ஆஸ்பத்திரிக்கு வரச் சொல்லியிருந்தார். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கேஸாக பார்ப்பது ஷ்யாமிற்கு நல்ல அனுபவமாக இருந்தது.

மதுவைக் காட்டி யார் என்றுக் கேட்ட ஷ்யாமிற்கு ஸ்ரீனிவாசன் எல்லாவற்றையும் விளக்கினார்.

மதுராவைப் பார்த்த கணத்திலிருந்து அவளை மீண்டும் மீண்டும் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் தனக்குள் ஏற்படுவதை ஷ்யாம் முதல் முறையாக உணர்ந்தான். அதுவும் அப்பாவிற்கு இப்படி ஆகிவிட்டது என்று மருண்டு போயிருந்த அந்த விழிகளை அவன் மனதிலிருந்து அகற்ற முடியவில்லை.

உடனே பாராமனிக்கு சென்று அங்கு இருந்தவர்களிடமிருந்து சிவராமன் குடும்பத்தைப் பற்றி முழு விவரங்களையும் தெரிந்துக் கொண்டான். மதுரா தாயற்றவள், அதுவும் சித்தி அவளை சரியாக கவனிப்பதில்லை என்று தெரிந்தவுடன், தாயற்ற ஷ்யாமிற்கு மதுராவின் மேல் மிகவும் அன்பு ஏற்பட்டது.

தன்னிடம் ஏற்பட்டுள்ள மாறுதல் ஷ்யாமிற்கு மிகவும் வியப்பை ஏற்படுத்தியது.

எப்படியும் தந்தையைப் பார்க்க மதுரா மறுபடியும் வருவாள் என்று நினைத்து அன்று முழுவதும் அங்கேயே இருக்கத் தீர்மானித்தான்.

"எத்தனைப் பெண்களைச் சந்தித்திருப்பேன். எவ்வளவு பேருடன் பழகியிருப்பேன். அப்பொழுதெல்லாம் இந்த மாதிரி ஒன்றும் தோன்றவில்லையே. நான் என்ன அந்தப் பெண்ணைக் கண்டதும் காதல் வயப்பட்டு விட்டேனா?" என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டான்.

சிறிது நேரத்தில் மதுரா தனது சித்தி கமலா, தங்கை, தம்பி எல்லோரையும் அழைத்து வந்தாள். கமலா ஐயோ, இந்தப் பொண்ண நெனைச்சு நெனைச்சே இவருக்கு இப்படி ஆயிடுச்சு. எவ்வளவு நல்லா இருந்தாரு. கவலைப்பட்டே இப்படி ஆயிடுச்சே'' என்று உரத்த குரலில் ஆரம்பிக்க பக்கத்தில் இருந்த நர்ஸ் வந்து அதட்டியதும் வாயை மூடினாள்.

இரவு சிவராமனுக்குத் துணையாகத் தங்கிவிட மதுரா தீர்மானித்தாள். கமலாவிடம் 'சித்தி சூர்யாவையும், நித்யாவையும் கூட்டிக்கிட்டு நீங்க போங்க நான் ராத்திரி அப்பாவோட இருந்துட்டு காலை வீட்டுக்கு வரேன்'' என்றாள்.

கமலாவும் அதற்கென்றே காத்திருந்தவள் போல் ''சரி சரி காலையில சீக்கிரமா வந்து சேரு. நான் இட்லி செஞ்சு வெக்கறேன். எடுத்துட்டு வந்துக் குடுக்கலாம்' என்று கூறிப்புறப்பட்டாள். இரவு சாப்பாட்டிற்கு மது என்ன செய்வாள் என்று கவலை சிறிதுமின்றி கமலா சென்று விட்டாள்.

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த ஷ்யாம் ஆஸ்பத்திரி கேண்டீனிலிருந்து உணவு தருவித்துக் கொடுத்தான்.



மதுரா தனக்கு வேண்டாம் என்று பலமுறைக் கூறியும், ஷ்யாம் கேட்காமல் வற்புறுத்தி சாப்பிட வைத்தான். மதுரா அங்குள்ளவர்களிடம் ஷ்யாம் யார் என்று கேட்டுத் தெரிந்துக் கொண்டாள். 'என்ன ஒரு கம்பீரம், டாக்டருக்குப் பொருத்தமான உருவ அமைப்பு' என்று நினைத்தவாறு தந்தையிடம் சென்று அவர் நிம்மதியாக தூங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டுத் தானும் உறங்கிப் போனாள்.

## 5

நன்கு உறங்கிக் கொண்டிருந்த மதுராவிற்கு திடீரென்று விழிப்பு ஏற்பட்டது. தந்தையிடம் சென்று பார்த்தாள். அவரிடம் சிறிதும் சலனமில்லாததால் சிறிது பயத்துடன் தொட்டுப் பார்த்தாள். உடம்பு சில்லிட்டுக் கிடந்தது. ஆம். சிவராமனின் உயிர் பிரிந்து சில மணிநேரங்கள் ஆகி விட்டிருந்தது. 'கார்டியாக் ஃபெயிலியர்' எனப்படும் மாரடைப்பு ஏற்பட்டு உடனடியாக மரணம் சம்பவித்துவிட்டிருந்தது. அது தூங்கும் நிலையிலேயே நிகழ்ந்து இருந்ததால் எந்த வித சலனமும் இல்லாது சிவராமன் மரணமடைந்து விட்டார்.

மதுவிற்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. ட்யூட்டி டாக்டர்களை அழைத்து வந்து பார்க்கச் சொன்னாள். விவரம் அறிந்தவுடன் புழுவாகத் துடித்தாள் மது. உலகமே தலைகீழாக சுற்றுவது போலிருந்தது. இருந்த ஒரே ஆதரவும் போய்விட்டதே என்று மனம் அழுது புலம்பியது. 'ஐயோ, சித்தியிடம் எப்படி போய் சொல்லுவேன்? எப்படித் தேற்றுவேன்?' என்று மிகவும் கலங்கினாள். செய்தி அறிந்தவுடன் டாக்டர் ஸ்ரீனிவாசனும், ஷ்யாமும் உடனே விரைந்து வந்தனர்.

ஸ்ரீனிவாசனே கமலாவிற்கு ஃபோன் செய்து விஷயத்தைக் கூறினார்.

சிறிது நேரத்தில் 'ஐயோ ஐயோ' என்று அலறியபடி கமலா வந்து சேர்ந்தாள்.

வந்து சிவராமனைச் சென்று பார்க்கக் கூட இல்லை. சரமாரியாக மதுவிற்கு அர்ச்சனைகள் விழ ஆரம்பித்தது.

''இந்தத் துக்கிரியை நினைத்துக் கவலைப்பட்டே அவரு போய் சேர்ந்துட்டாரு. ஐயோ நான் இனிமே என்ன செய்வேன்? யாரு இருக்கிறாங்க எனக்கு?'' என்று பலவாறு புலம்ப ஆரம்பித்தாள்.

ஒருவாறு நிலைமையை சமாளித்து அனுப்பி வைத்தனர். அச்சமயத்தில் உறவினர்கள் யாரும் இல்லாததால் சிவராமனின் நண்பர் ஒருவரை டாக்டர் ஸ்ரீனிவாசன் அவர்களுடன் அனுப்பி வைத்தார்.

ஷ்யாமிற்கு மதுவின் செய்வதறியாது திகைத்து, சோகம் அப்பிய முகம் மனதை ஏதோ செய்தது. அவளை இழுத்துத் தன் மார்போடு சேர்த்து ''நான் இருக்கிறேன் கண்ணம்மா'' என்று ஆறுதல் கூற வேண்டும் போல இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக அவளது படிப்பைப் பற்றி மிகவும் கவலைப்பட்டுப் பிறகு ஒரு முடிவுக்கு வந்தான்.

எல்லாக் காரியங்களும் முடிந்து உறவினர்களெல்லாம் சென்று விட்டனர். கமலா மதுவின் பக்கம் கூடத் திரும்பவில்லை. அவளுடன் ஒரு வார்த்தைக் கூடப் பேசவில்லை. நித்யாவும், சூர்யாவும் கூட அவளைத் தவிர்த்தனர். மதுவிற்குத் தந்தை இறந்த சோகத்தை விட இது மிகவும் கொடுமையாக இருந்தது. "சித்தியேன் சித்தி என் கூடப் பேச மாட்டேங்கறீங்க? நான் என்ன பாவம் செஞ்சேன்? எனக்கு உங்கள விட்டா யாரு இருக்கா. என்னோட பேசுங்க" என்று கதறி அழுதாள்.

கமலா "தோ பாரு மது. நல்லா எல்லாத்துக்கும் நெழலா இருந்த மரம் சாஞ்சிடுச்சு. நாம இப்ப வெட்ட வெளியில நிக்கறோம். உனக்கு நான் சொல்றது பிடிக்குமோ, பிடிக்காதோ தெரியாது, ஆனா நீ வேலைக்குப் போய் ஏதாவது சம்பாதிச்சிட்டு வந்தா நாம நாலு பேரும் மூணு வேளைக் கஞ்சியாவது குடிக்கலாம். அதுக்கப்புறம் உன்னோட இஷ்டம்" என்று சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

மதுவின் மனதில் மிகப்பெரிய குழப்பம் ஏற்பட்டது. என்ன செய்வது என்றும் புரியாமல் திகைத்துப் போயிருந்தாள்.

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தது போல மதுவின் பரீட்சை ரிஸல்ட்டும் வந்தது. அவள் ஆசைப்பட்டது போலவே மாநிலத்தில் நான்காவது ரேங்க் வாங்கியிருந்தாள். எண்ட்ரன்ஸ் பரீட்சையிலும் நல்ல மதிப்பெண்கள் வாங்கியிருந்தாள்.

மதுவிற்கு இதைப் பார்க்க அப்பா இல்லையே என்று மிகுந்த ஏக்கமாக இருந்தது. தான் இவ்வளவுக் கஷ்டப்பட்டு உழைத்த உழைப்பின் பலனைக் கொண்டாடும் மனநிலையில் அவள் இல்லை. சித்தி கூறியதைப் பற்றித் தீவிரமாக யோசனை செய்தாள். கனவுகளை மண்ணோடு மண்ணாக்கி தூக்கி எறிந்துவிட்டு சித்தி கூறியபடி எங்காவது வேலைக்குச் செல்லலாம் என்ற முடிவிற்கு வந்தாள். பள்ளியில் ஆசிரியர்களைச் சென்று சந்தித்தவுடன் அவர்களிடம் 'நான் மேற்கொண்டுப் படிக்கப் போவதில்லை, குடும்ப சூழலின் காரணமாக வேலைக்குச் செல்லப் போகிறேன். உங்களுக்கும் ஏதாவது தெரிந்தால் சொல்லுங்கள்' என்று எப்படி சொல்வது என்று பரிதவித்தாள் எல்லோரும் வாழ்த்துக் கூறும்போது புன்னகையை வலிய வரவழைத்துக் கொண்டாள். சொல்ல வந்ததை சொல்லாமலேயே வீடு திரும்பினாள்.

வீட்டின் சூழ்நிலை சிறிதும் மாறவில்லை. சித்தியிடம் இன்று 'உங்கள் விருப்பப்படியே வேலைக்குச் செல்கிறேன்' என்று சொல்லி விட வேண்டும் என்று நினைத்த கணத்தில் டெலிபோன் ஒலித்தது.

சித்தி "யாரு மதுராவா?... இருக்காளே... நீங்க யாரு பேசறது? ஓ அப்படியா சரி வாங்களேன்" என்று பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டு யார் தன்னை அழைப்பது" என்று யோசித்தாள்.

சித்தி "மது, உனக்கு போன் பாரு" என்றுக் கூறி ரிஸிவரைக் கையில் கொடுத்தாள்.

"ஹலோ மதுராவா.." என்றக் குரலைக் கேட்டவுடனேயே யாரோ



மிகவும் நெருங்கியவர் தன்னை அழைப்பதாக உணர்ந்தாள் மதுரா.

"ஹலோ நீங்க யாரு பேசறது..."

"நான்தான் ஷ்யாம், டாக்டர் ஸ்ரீனிவாசன் மகன் பேசறேன் அப்பாவும் நானும் இன்று உன் அப்பாவின் செட்டில்மெண்ட் விஷயமாகப் பேச உங்கள் வீட்டிற்கு வரலாம் என்று இருக்கிறோம். வரலாமில்லையா?" என்றதும் ஒரு நிமிடம் என்ன சொல்வது என்று புரியாமல் "வா...ங்களேன்" என்று கூறி ரிஸிவரை வைத்தாள்.

ஏதோ களைத்துப் போயிருந்த மனதிற்கு மயிலிறகால் விசிறப்பட்டது போல இருந்தது ஷ்யாமின் குரல்.

சொன்னபடியே மாலை 5 மணி சுமாருக்கு டாக்டர் ஸ்ரீனிவாசனும் அவரது மகனும் மதுராவின் வீட்டிற்கு வந்தனர். செட்டில்மெண்ட் விஷயம் என்று சொன்னதால் கமலா வாயெல்லாம் பல்லாக வரவேற்று உட்கார வைத்தாள்.

வீட்டிற்குள் வந்தவுடன் டாக்டர் ஸ்ரீனிவாசன் மதுராவிடம் "கங்க்ராஜுலேஷன்ஸ் மை சைல்ட் ரொம்ப நல்ல மார்க் வாங்கி அசத்தியிருக்கியே. சிவராமன் இருந்திருந்தால் மிகவும் சந்தோஷப்பட்டிருப்பான். எனியே நாங்க இருக்கோம் கவலைப்படாதே" என்றார்.

ஷ்யாம் மெலிதாகப் புன்னகைத்தப்படி தன் வாழ்த்துக்களைத் தெரிவித்தான்.

கமலாவிற்கு பேச வந்ததை விட்டுவிட்டு எதையோப் பேசுகிறார்களே என்றுக் கோபமாக வந்தது.

டாக்டர் ஸ்ரீனிவாசனைப் பார்த்து "ஏதோ செட்டில்மெண்ட் சமாசாரம் என்று சொன்னீங்களே? எவ்வளவு பணம் வரும்? ஏன்னா இப்பவே ரொம்ப கஷ்டமாத்தான் இருக்கு. இப்ப ஏதாவது கிடைச்சதுன்னா அத பேங்க்ல போட்டுட்டு, வர்ற வட்டியிலதான் ஜீவனம் செய்யணும்.

மதுரா வேற வேலைக்குப் பார்த்துக்கிட்டு இருக்கறா உங்க ஆஸ்பத்திரியிலேயே ஒரு வேலை போட்டுக் கொடுத்தீங்கன்னா நல்லா இருக்கும்" என்றாள்.

ஸ்ரீனிவாசன் அதைக் கேட்டுவிட்டுப் புன்னகையுடன் கூறினார்.

"அதெல்லாம் பத்திப் பேசலாம்னுதாம்மா நாங்களே உங்க வீட்டுக்கு வந்திருக்கோம். முதல்ல மதுராப் பொண்ணோட படிப்பப் பத்திப் பேசணும். அவளுக்கு மெடிக்கல் ஸீட் கண்டிப்பாக கெடைக்கும். சிவராமனோட ஆசையும் அதுதான். அதனால அவளோடப் படிப்புக்கு ஆகற செலவ நாங்க ஸ்பான்ஸர் பண்றதா இருக்கோம். அதாவது அவ படிப்பு முடிச்சதும் நல்லபடியா வேலைக்குப் போய் மெதுவாகத் திருப்பிக் கொடுத்துடணும். சிவராமன் எங்க ஆஸ்பத்திரியில வேல செஞ்ச விசுவாசமான ஊழியர். அவரோட பொண்ணோட படிப்பு, அதுவும் ஸ்டேட் ரேங்க் எடுத்திருக்கிற பொண்ணோட படிப்பு, பாதியில கெடக்கூடாது. அதனாலதான் நாங்க நல்லா யோசிச்சு இந்த முடிவுக்கு வந்திருக்கோம். அநேகமாக மதுராவுக்கு தஞ்சாவூர் மெடிக்கல் காலேஜ்ல கெடச்சிடும்னு நெனைக்கிறேன்.

அங்க சேத்திடலாம்

மற்றபடி செவாமனோட பி.அப் மற்றும் இன்ஷூரன்ஸ், இன்னும் இதரப் பிடிப்புகள் எல்லாம் சேர்த்து ஒரு தொகையை உங்களுக்குத் தரோம். அத நீங்க சொன்ன மாதிரி பேங்க்ல போட்டுக்கலாம்'' என்றார்.

கேட்டுக் கொண்டிருந்த கமலாவிற்கு வயிற்றில் அமிலம் பாய்ந்தாற் போலிருந்தது. என்ன ஒரு அதிருஷ்டம்! எல்லாம் அமைகிறதே! என்றும் மனம் குமைந்தாள். ஒரு பக்கம் ஷ்யாம் வேறு மதுராவையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தது. வேறு அவளுக்கு வெறுப்பை அளித்தது. ''ஒரு வேளை ஷ்யாம் மதுராவை விரும்புகிறானோ? அப்படி எதும் நடந்து விட்டால்?'' கமலாவிற்கு அந்த நினைப்பே தீச்சட்டியை தலையில் கவிழ்த்த மாதிரி இருந்தது. ஸ்ரீனிவாசன் கூறியதை உடனடியாக மறுத்துவிட வேண்டும் என்றுநினைத்தாள். ஆனால் செட்டில் மெண்ட் பணம் கிடைக்காமல் போய்விட்டால் என்ன செய்வது என்று யோசித்து விட்டு பிறகு கூறினாள்.

''நீங்க சொல்றது எல்லாம் வாஸ்தவம் தான். ஆனா எங்க குடும் பத்தில இதெல்லாம் பழக்கமில்லைங்க. நாளைக்கு நாலு பேர் நாலு விதமா சொல்ல ஆரம்பிச்சுட்டாங்கன்னா? ரெண்டு பொம்பள பசங்கள கர சேக்க ணுங்களே! அதனால நீங்க எங்க வீட்டுக்காரர் பணத்த மட்டும் கொடுங்க நீங்க சொன்னமாதிரி மதுவோட படிப்பு பாதியில கெடாம ஏதோ அதிகம் செலவில்லாத படிப்ப படிக்கட்டும். பின்னாடி ஏதாவது ஒரு வேலைக்குப் போகட்டும்'' என்றாள்.

இதைக் கேட்டதும் ஸ்ரீனிவாசனுக்கு மிகவும் கோபம் வந்தது. ஆனா லும் சற்று நிதானமாக மதுவை நோக்கி ''இக்கப்பாரும்மா, உனக்காகத் தான் நாங்க மெனக்கெட்டு உங்க வீட்டுக்கு வந்திருக்கோம். நீ என்ன சொல்ற? உங்க சித்தி சொன்ன மாதிரி வேற ஏதாவது கோர்ஸ் சேரப் போறியா? ஸ்டேட் ரேங்க் வாங்கிட்டு மேல படிக்காம வேலைக்குப் போகப் போறியா? இல்ல மெடிக்கல் காலேஜ் சேரப் போறியா? நல்லா யோசிச்சிட்டு பதில சொல்லு. நீ எதுக்கும் பயப்படாத. நாங்க இருக்கோம். நாளைக்கு ஆஸ்பத்திரியில் வந்து என்னைப் பாரு. அப்ப நாங்க வாரோம்'' என்று சொல்லிவிட்டு இருவரும் புறப்பட்டனர்.

நித்யாவும் ஷ்யாம் மதுராவைப் பார்த்துக் கொண்டிருந்ததை கவனித் தாள். அவளது பார்வை நெருப்பை உமிழ்ந்தது.

அவர்கள் இருவரும் சென்றவுடன் கமலா பிலுபிலுவென்று பிடித் துக் கொண்டாள்.

''இது என்ன புதுசா இருக்கு? இவுங்க செலவு பண்றாங்களாமே! நீ என்னம்மா சொல்ற? ஆஸ்பத்திரிக்குப் போய் அவங்ககிட்ட கெஞ்சினா? நான் என்னவோ செத்துப் போனவரோட பணத்தைப் பத்திதான் பேச வந் திருக்காங்கன்னா உன்னோட படிப்பப் பத்தி மட்டும்தான் பேசினாங்க. இதெல்லாம் நல்லா இல்ல. அதனால அவங்க கிட்டப்போயி நான் வேலைக் குப் போகப் போறேன்னு சொல்லிட்டு வந்திடு'' என்றாள்.



மதுரா இதை எதிர்பார்த்திருந்ததனால் கமலா பேசியது அவளை பாதிக்கவில்லை. இரவு முழுக்க யோசித்து ஒரு முடிவுக்கு வந்தாள். காலை யில் புறப்படும்போது கமலா ''நான் சொன்னது ஞாபகமிருக்கட்டும்'' என் றாள்.

நேரே ஆஸ்பத்திரிக்குச் சென்று டாக்டர் ஸ்ரீனிவாசன் இருக்கும் அறை வாசலில் அமர்ந்து அவருக்காகக் காத்திருந்தாள். வழக்கம்போல பத்து மணிக்கு அப்பாவும் மகனும் வந்தனர். ஸ்ரீனிவாசன் மதுவைப் பார்த் தவுடன் ''ஓ! மதுராவா? வாம்மா, நான் சொன்னபடி வந்திட்டியே, குட். கேள். உக்காரு கவுன்சிலிங் எப்பிக்குன்னு தெரியுமா? எல்லாம் கேட்டு விசாரித்து வைத்துக் கொள். என்னிக்கு சேரச் சொல்றாங்களோ அன்னிக் குதான் பணத்தோட வரேன். என்ன புரிஞ்சுதா?'' என்றார்.

மது வேறு எதுவும் பேசாமல் எல்லாவற்றிற்கும் சம்மதம் என்று சொல்லி தலையசைத்தாள்.

மது எங்கே அவள் சித்தி சொன்னபடி வேலை தேடும் படலத்தில் இறங்கி விடுவாளோ என்ற கவலையுடன் அவளையே கவனித்துக் கொண் டிருந்த ஷ்யாமிற்கு மது மேல்படிப்பிற்கு ஒப்புக் கொண்டது மிகவும் மகிழ் ச்சியினை அளித்தது. மதுவிற்கு படிப்பிற்காக ஸ்பான்சர் செய்யலாம் என்ற ஐடியாவை சொன்னவனே அவன்தான். ஸ்ரீனிவாசன் உடனே ஒப் புக் கொண்டார் அதுவும் ஸ்டேட் ரேங்க் வாங்கிய ஒரு ஸ்டூடண்டுக்கு உதவு வதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததே என்று எண்ணி ஷ்யாம் கூறிய விஷயத் திற்கு சம்மதித்தார்.

ஸ்ரீனிவாசன் மதுவின் தோள்களை லேசாகத் தட்டிக் கொடுத்து ''நீ ஒரு புத்திசாலிப் பொண்ணுங்கறத நிரூபிச்சிட்ட, உனக்கு வளமான எதிர் காலம் இருக்கு. கவலைப்படாதே!'' என்று சொல்லிவிட்டு ரவுண்ட்ஸாக் குப் புறப்பட்டார்.

ஷ்யாமும் தன் பங்கிற்கு வாழ்த்தினை தெரிவித்து விட்டு தந்தை யைப் பின் தொடர்ந்தான். மது வீட்டிற்குச் சென்று கமலாவிடம் ''சித்தி நான் மெடிக்கல் காலேஜ் சேர ஒத்துக்கிட்டு வந்திட்டேன். அவங்க ஒண் ணும் சும்மா படிக்க வைக்கலியே, நான் சம்பாதிச்சு அத திருப்பிக் கொடுத் திடப் போறேன். நித்யா, சூர்யா படிப்பு இனிமே என் பொறுப்பு. நான் கண்டிப்பாக அவங்கள நல்லாப் படிக்க வெப்பேன்'' என்றதுதான் தாம தம்.

கமலா ''எனக்குத் தெரியும். நீ உன் புத்திய இப்படித்தான் காட்டு வல்லு வேண்டாம்மா. நீ எங்களுக்கு ஒண்ணும் பண்ண வேணாம். நீ எங்க இருந்தாலும் சந்தோஷமா இரு. ஆண்டவன் இருக்கான். எங்களுக்கு ஏதா வது ஒரு வழியக்காட்டுவான். வந்திட்டா, எம் புள்ளைங்கள இவ படிக்க வெக் கறாளாம்'' என்று ஒரு பாட்டம் கத்தினாள்.

அதன்பின் வழக்கம்போல கமலா, நித்யா, சூர்யா மூவரும் மதுவை விலக்கி வைத்தனர்.

ஆனால் மதுரா மனதைக் கல்லாக்கிக் கொண்டாள். தன் தாயை

நினைத்துக் கொண்டு டாக்டராகி விட வேண்டும் என்ற லட்சியம் மனதுனுள் வேரூன்றி விட்டதால் சித்தியின் அலட்சியம் அவளை ஒன்றும் செய்யவில்லை.

அதன் பின்னர் கவுன்சிலிங் நடந்தது. ஸ்ரீனிவாசன் அவளுடன் கூட வந்து பணத்தை செலுத்தி அட்மிஷன் வாங்கியது எல்லாம் ஒரு கனவில் நடப்பது போல் வேகமாக நடந்தேறியது. அவர் கூறியது போல, அவளுக்கு தஞ்சாவூர் மெடிக்கல் காலேஜிலேயே கிடைத்தது. மதுராவும் தஞ்சைக்கு பயணமானாள்.

## 6

என்னதான் ஆசையோடு படிக்க வேண்டும் என்று புறப்பட்டு வந்து சேர்ந்துவிட்டாலும், அந்தச் சூழல் மதுராவிற்கு சற்று பயத்தையே அளித்தது. முதலாமாண்டு மாணவர்களை ராகிங் செய்வார்களே என்று மிகவும் கவலைப்பட்டாள். டாக்டர் ஸ்ரீனிவாசன் மதுராவைக் கொண்டு விட்டுத் தேவையானப் பொருட்களையெல்லாம் வாங்கிக் கொடுத்துவிட்டு வரும் பொறுப்பைத் தன் பர்ஸனல் செகரட்டரி ஜெயராமனிடம் விட்டிருந்தார். அவரும் வயதானவர். அவருக்கும் மதுரா மாதிரியே ஒரு மகள் இருந்ததனாலோ, என்னவோ, மதுவிடம் மிகவும் வாஞ்சையா இருந்தார்.

ஸ்ரீனிவாசன் கூறியபடியே தஞ்சாவூர் வந்து மதுராவை ஹாஸ்டலில் சேர்த்துவிட்டுப் பிறகு அத்தியாவசியப் பொருட்களையும் வாங்கிக் கொடுத்தார். ஸ்ரீனிவாசன் சென்னையிலேயே மதுரா கல்லூரிக்குப் போட்டுக் கொண்டு போவதற்காக சில சுடிதார் செட்டுகளை வாங்கிக் கொடுத்தார்.

எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு ஜெயராமன் புறப்பட்டார். புறப்படும்போது ''குழந்தை நீ நல்லா படிப்பங்கறதில எந்த சந்தேகமும் இல்ல. நல்லாப்படி, எதப் பத்தியும் யோசிக்காத. ஸ்ரீனிவாசன் சார் ஒரு தெய்வம். கடவுள் நேரில் வந்தா, நாலு கையோட, கிரீடத்தோட வா காட்சி தருவார்? இந்த மாதிரி மனுஷங்க மூலமாத்தான் வந்து உதவி பண்ணுவார். உனக்கு கடவுள் அனுகிரகம் நிறையவே இருக்கு. எதப்பத்தியும் கவலப்படாதம்மா. நான் வரேன்'' என்று கூறி சென்றார்.

மதுராவும் எங்கே ராகிங் செய்வார்களோ என்று பயந்துக் கொண்டே முதல் நாள் கல்லூரிக்குச் சென்றாள். ஜெயராமன் கூறியபடி கடவுள் அனுகிரகம் அவளுக்கு இருந்ததனால், அவள் தோழி வைஷ்ணவியின் அக்கா வேதிகா, அக்கல்லூரியில் மூன்றாமாண்டு படிப்பவள், வந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

பிறகு மதுராவிற்கு எல்லாமே வேதிகா என்று ஆயிற்று. லைப்ரரியை எப்படி பயன்படுத்திக் கொள்வது, எப்படி நோட்ஸ் எடுப்பது போன்ற விஷயங்களையெல்லாம் வேதிகா, மதுவிற்கு நன்கு கற்றுக் கொடுத்தாள்.



ஸ்ரீனிவாசனும் அவ்வப்போது கல்லூரிக்கு ஃபோன் செய்து மதுவின் சேம லாபங்களை விசாரித்துக் கொள்வார்.

ஒரு நாள் விசிட்டர் அவர்ஸில் மதுவைப் பார்க்க ஒருவர் வந்திருப்பதாக வாட்ச்மேன் கூறிவிட்டுச் சென்றான். மதுவிற்கு ஒன்றும் புரியவில்லை. தன்னைப் பார்க்க யார் வந்திருப்பது? சித்தியும் சுத்தமாகப் பேசுவதில்லை. ஒரு வரி லெட்டர் கூட போட்டு விசாரிப்பதில்லை. பின்னர் யாராக இருக்கும் என்ற யோசனையோடு வந்தவளுக்கு வந்திருப்பது ஷ்யாம் என்று தெரிந்ததும் ஒன்றுமே விளங்கவில்லை.

''வாங்க சார், எது இவ்வளவு தூரம் வந்திருக்கீங்க, ஒரு ஃபோன் பண்ணியிருந்தால் போதுமே, எதுக்கு உங்களுக்கு இவ்வளவு சிரமம்'' என்று படபடத்தாள்.

ஷ்யாம் சிறு புன்னகையோடு மதுராவை நோக்கி ''முதலில் நீ என்னை இந்த சார், மோர் என்றெல்லாம் கூப்பிடுவதை நிறுத்த வேண்டும் புரிந்ததா?'' என்றான்.

மது பயந்து கொண்டு தலையாட்டியதைப் பார்த்ததும் ஷ்யாமிற்கு சிரிப்பு வந்தது.

''பின்ன என்ன சொல்லிக் கூப்பிடுவது'' என்று கேக்க மாட்டியா? என்றான்.

அதற்கும் 'ம்' என்ற பதில்தான் வந்தது. ''இங்க பாரு என்ன நீ ஷ்யாம்னே சொல்லிக் கூப்பிடலாம்'' என்றான்.

உடனே மது ''ஐயையோ, உங்களப் பேரை சொல்லி கூப்பிடறதா? என்னால முடியாதுப்பா'' என்றாள்.

ஷ்யாம் ''அப்படின்னா நானும் உங்களை வாங்க மதுரா, போங்க மதுரா என்று சொல்வேன் சம்மதமா?''

மதுவின் தலை கவிழ்ந்தது.

இளம் பச்சை நிறத்தில் மெரூன் கலரில் எம்ப்ராய்டரி செய்திருந்த பாலிகாட் சுடிதாரில் மது கொள்ளை அழகுடன் காணப்பட்டாள். அடர்ந்து நீண்டு இருந்த பின்னலில் சூட்டியிருந்த மல்லிகைச்சரம் அவளை இன்னும் அழகாக்கிக் காட்டியது.

ஷ்யாமிற்கு மதுவை அப்படியே இழுத்து நெஞ்சாரத் தழுவி முத்தமிட வேண்டும் போல இருந்தது. முதலில் தன் காதலையே அவளிடம் சொல்லவில்லை பிறகு எப்படி? என்று தன்னைக் கேட்டுக் கொண்டவன் மதுவிடம் ''நான் மேலே எம்.எஸ். பண்ணலாம்னு இருக்கேன் அது விஷயமா என் நண்பன் கணேஷைப் பார்க்கலாம்னு வந்தேன். கணேஷ் தஞ்சாவூர்லதான் இருக்கான். எப்படியும் இவ்வளவு தூரம் வந்தேன். சரி உன்னைப் பார்த்துட்டுப் போலாம்னு வந்தேன். ஏன் வரக்கூடாதா?''

''ஐயோ அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல, எனக்கு ரொம்ப சந்தோஷம் தான். வாங்க கேண்டீனுக்கு போய் காபி சாப்பிடலாம்''

''அப்பாடி காபியாவது சாப்பிடலாம்னு கூப்பிட்டியே? எங்கே அப்படியே போய்ட்டு வாங்கன்னு சொல்லிடுவியோன்னு பார்த்தேன்.''

இருவரும் கேன்டீனில் காபி குடித்தனர். பிறகு ஷ்யாம் புறப்பட்டான். அவன் வந்ததே மதுவைப் பார்க்கத்தானே. ஆனால் எம்.எஸ். பண்ண வேண்டுமென்று மதுவிடம் கூறியதென்னவோ உண்மைதான்.

அதற்காகத் தீவிரமாகப் படித்துக் கொண்டிருந்தான். என்ட்ரன்ஸில் தேர்வு பெற வேண்டுமே" தந்தையுடன் தினமும் ஆஸ்பிடல் செல்வது மிகுந்த பலனைக் கொடுத்தது. அவனது கடின உழைப்பிற்குப் பலனாய் எம்.எஸ்.ஸிலேயே அவனுக்கு எம்.எஸ்.சீட் கிடைத்தது.

மதுவிற்கும் முதலாமாண்டு பரீட்சை ஆரம்பித்து விட்டது. ஏற்கெனவே புத்தகப் புழு. இப்போது பரீட்சை வேறு கேட்கவா வேண்டும்? மிகவும் கடுமையாக உழைத்தாள்.

நல்ல மார்க் வாங்கிட வேண்டும் என்பது லட்சியமாக இருந்தது. எதிர்பார்த்தபடியே மிகவும் நன்றாகத் தேர்வு எழுதினாள். சித்திக்கும் விடுமுறைக்கு வீட்டுக்கு வருவதாகக் கடிதம் போட்டாள். ஸ்ரீனிவாசனுக்கும் போன் மூலமாகத் தெரிவித்தாள்.

கடிதம் போட்டிருந்தும் கமலா வேண்டுமென்றே நித்யாவையும், சூர்யாவையும் அழைத்துக் கொண்டு அவளது அக்கா வீட்டிற்குச் சென்று விட்டாள்.

மதுவிற்கு இது மிகவும் அதிர்ச்சியாக இருந்தது. என்ன செய்வதென்று புரியாமல் நேரே ஸ்ரீனிவாசனிடம் சென்று விஷயத்தை கூறினாள். ஸ்ரீனிவாசனுக்கும் இதைக் கேட்டதும் மிகவும் வருத்தமாக இருந்தது. அவருக்கும் அவளை எங்கு தங்க வைப்பது என்று குழப்பமாக இருந்தது. தனக்கும் ஒரு பையன் இருக்கிறான். வயதுப் பெண்ணை எப்படி அங்குத் தங்கச் செய்வது? என்று யோசித்தார்.

ஷ்யாம் உடனே ஒரு நல்ல உமன்ஸ் ஹாஸ்டலில் தங்கச் செய்யலாம் என்றுக் கூறவும் அதன்படியே அந்த விடுமுறை நாட்களுக்கு மட்டும் மதுராவை உமன்ஸ் ஹாஸ்டலில் தங்கச் செய்தார். மதுராவிற்கு சித்தியின் செய்கை மிகவும் வருத்தமளித்தது. ஹாஸ்டலில் இருந்துக் கொண்டு சித்தியை சந்திக்க நினைத்தாள். நித்யாவையும் சூர்யாவையும் பார்க்க வேண்டுமென்று மிகவும் ஏங்கினாள். ஆனால் தன்னை சந்திக்கவே கூடாது என்பதற்காகத் தானே சித்தி கடிதம் போட்டிருந்தும் ஊருக்குச் சென்றாள்! தான் எதற்குத் தேவையில்லாத பிரச்சினையை உருவாக்க வேண்டும் என்று யோசித்து விட்டு தன்னுடன் கொண்டு வந்துள்ள புத்தகங்களைப் படித்துப் பொழுது போக்கினாள்.

இதைப் போன்றே இரண்டு தேர்வுகள் கழிந்து விட்டது. இடையிடையே ஷ்யாம் தஞ்சாவூருக்கு சென்று மதுவை சந்திப்பது வழக்கமாகி விட்டது. ஆனால் அவன் அவளை சந்திக்க வருவது ஸ்ரீனிவாசனுக்கு தெரியாது.

மதுவிற்கு முதலில் ஷ்யாம் தன்னை அடிக்கடி சந்திக்க வருவது தர்மசங்கடமாக இருந்தாலும் பின்னர் பழகிவிட்டது. புத்திசாலி மதுவிற்கு ஷ்யாம் மனதிலிருந்தது புரியாதா என்ன? ஷ்யாம் தன்னை விரும்புகிறான்



என்பதை நன்றாகவே உணர்ந்தாள்.

ஆனால் எதுவுமே இல்லாத தான் எங்கே மல்டி மில்லியனர் மகன் ஷ்யாம் எங்கே? இதெல்லாம் நடக்கற காரியமா? அதுவும் ஸ்பான்சர் வழங்குபவரிடம் தான் காதல் கொள்வதா? உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்வது மாதிரியல்லவா ஆகிவிடும்? கண்டிப்பாகக் கூடாது என்று ஷ்யாமின் பால் ஈர்க்கப்பட்ட மனதைப் பூட்டி வைத்தாள்.

ஐந்தடி பத்து அங்குலம் உயரம் கம்பீரமான தோற்றம் சிவந்த நிறம். மூக்கின் கீழ் கம்பளிப் பூச்சி மீசை. மொத்தத்தில் கமலஹாசனைப் போன்ற உருவம். நேர்த்தியாக உடையணிந்துக் கொள்ளும் பாங்கு. வசீகரமான உருவ அமைப்பு, மென்மையான குரல் கொண்ட ஷ்யாமை மதுராவிற்கு மிகவும் பிடித்துப் போனதில் வியப்பில்லை.

ஷ்யாம் வரும்போது ஏற்படும் இனம்புரியாத சந்தோஷம், அவன் புறப்பட்டுப் போகும் போது மனதில் ஏற்படும் பாரம் எல்லாம் மதுவிற்கு தெள்ளத் தெளிவாகக் காதல்தான் என்பதை உணர்த்தின. ஆனால் அவள் உள் மனம்

'மதுரா உன் லட்சியமென்ன? என்னதான் சித்தி உன்னை வெறுத்தாலும், உன் அம்மாவிற்குப் பிறகு அவர் இடத்தில் வந்தவளல்லவா? நித்யாவையும், சூர்யாவையும் யார் படிக்க வைப்பார்கள்? உன் தந்தை இருந்து செய்ய வேண்டியதை நீ செய்யப் போகிறேன் என்று பிரமாதமாக மார் தட்டிக் கொண்டாய். இப்பொழுது ஷ்யாமைப் பார்த்தவுடன் காதல் உணர்ச்சி தலைதூக்குகிறதா? முதலில் உன் கடமையைச் செய். இப்பொழுது காதலுக்கு இடங்கொடுக்காதே" என்று சாடியது.

அவ்வளவுதான் காதல் நத்தை தன் உடம்பை சுருக்கிக் கொண்டது.

இதற்கிடையில் ஷ்யாமின் தேர்வும் முடிவுற்றது. அவன் நினைத்தபடியே எம்.எஸ். பரீட்சையில் தேர்ச்சி பெற்று விட்டான். தேர்வு முடிவைப் பார்த்து தந்தைக்குத் தெரிவித்தவுடன் உடனே மதுவைப் பார்க்க வேண்டும் போல இருந்தது. மதுவை ஒரு நல்லப் பரிசுப்பொருளோடு பார்க்க வேண்டும் என்று நினைத்து முத்தும்; பச்சைக்கல்லும் பதித்த, வெள்ளியில் தங்க முலாம் பூசிய ஒரு நெக்லெஸ் செட்டை வாங்கிக் கொண்டு தஞ்சாவூர் புறப்பட்டான்.

மதுவிற்கு மூன்றாமாண்டு தேர்வுகள் அறிவிக்கப்பட்டபடியால் புத்தகத்தோடு ஒன்றியிருந்தாள். அன்று என்ன தோன்றியதோ பச்சை வண்ணத்தில் வெள்ளைப் பூங்கொத்துகள் நிறைந்த சேலையை எடுத்து உடுத்திக் கொண்டாள்.

ஷ்யாம் மாலை சுமார் நாலரை மணிக்கு எப்பொழுதும் போல விசிட்டர்ஸ் அறையில் அமர்ந்து மதுவை கூப்பிடுமாறு சொல்லி அனுப்பினான். பச்சை வண்ண சேலையில் தேவதை மாதிரி வந்து கொண்டிருந்த மதுவைப் பார்த்ததும் ஒரு விநாடி இமைக்க மறந்து பிறகு சுதாரித்துக் கொண்டான். மனதிற்குள் தான் வாங்கிவந்த நெக்லெஸுக்குப் பொருத்தமான புடவை தான் 'என்ன ஒரு கோயின்சிடன்ஸ்' என்று வியந்துக் கொண்டான்.

மதுவிடம் பிறகு மெல்லத் தேர்வு விஷயம் பற்றிக் கூறினாள். ''அப்படியா! கங்க்ராஜுலேஷன்ஸ்! சென்னை ஒரு நல்ல கார்டியாலஜிஸ்டை வரவேற்பதில் மிகவும் பெருமையடைகிறது'' என்று கைகளை பின்னால் கட்டிக் கொண்டு தலையைக் குனிந்துக் கொண்டு பவ்யமாகக் கூறியதைப் பார்த்து ஷ்யாம் வாய்விட்டு சிரித்தான்.

''அநேகமாக அப்பா எங்க ஆஸ்பிடலிலேயே ஜாய்ன் பண்ணச் சொல்லிடுவார். இனிமேல ரொம்ப பிஸியாயிடுவேன். மேடத்தை அடிக்கடி பார்க்க முடியுமோ, முடியாதோ, தெரியலை இந்த என்னோட ஸ்மால் கிப்ட் வாங்கிக்கோ என்றுசொல்லி வாங்கி வந்ததைக் கொடுத்து விட்டு உடனே போட்டுக் காட்டுமாறுக் கூறினான்.

மிகவும் மறுத்தால் ஷ்யாமின் மனம் கஷ்டப்படக் கூடும் என்று அணிந்துக் காட்டினாள். அது அவள் அழகுக்கு மேலும் அழகு சேர்த்தது.

ஷ்யாமிற்கு மதுவிடம் தன் காதலை உடனே சொல்லி விட வேண்டும் போலிருந்தது. ஆனால் அவன் மனதிற்குள் அவள் படிப்பு முடியும் வரை அவளிடம் தெரிவிக்கக் கூடாது என்று முடிவு செய்திருந்தான்.

வேறு ஒன்றும் சொல்லாமல் கைகளால் நன்றாக இருக்கிறது என்று சமிக்ஞை செய்தான். மது அதைப் பார்த்து தன்னையறியாமல் முகம் சிவந்தாள்.

பிறகு அவளிடம் விடை பெற்றுக் கொண்டு ஷ்யாம் புறப்பட்டான்.

## 7

ஸ்ரீனிவாசன் மெல்லத் தன்னுடைய இடத்தில் மகன் ஷ்யாமை அமர்த்திவிட்டார். ஷ்யாம் எம்.எஸ். முடித்தவுடன் தினம் ஆஸ்பிடலுக்குச் செல்வதைத் தவிர்த்து வாரத்திற்கு இருமுறை சென்றார். முக்கியமான ஆபரேஷன் தினங்களில் அவனுடன் கூடவே இருந்து பயிற்சி அளித்தார். பிறகு வாரத்திற்கு ஒரு முறை என்று ஆகி பின்னர் அவர் ஆஸ்பிடலுக்கு எப்பொழுதாவது வருவது என்று ஆகிவிட்டது.

ஷ்யாமிற்கு தன் தந்தை மிகவும் கடினமாக உழைத்துக் கட்டிக் காத்து வந்த பெயரையும் புகழையும் அப்படியே தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் மிக அதிகமாகவே இருந்ததால் ஓய்வு என்பதையே மறந்தவனாய் எப்பொழுதும் ஆஸ்பிடல், பேஷண்ட்ஸ், ஆபரேஷன் போன்றவையே அவனை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது.

மதுவிற்கு இந்த வருடம் ஹவுஸ் சர்ஜன் கோர்ஸ் ஆஸ்பிடலிலும் வேலை பார்த்துக் கொண்டு படிக்கவும் செய்து கொண்டு அவளும் ஓய்வின்றி, எதைப் பற்றிய சிந்தனையுமின்றி இருந்தாள். ஹவுஸ் சர்ஜன் ஆனால் 'ஸ்டைபண்ட்' கிடைக்கும். இருந்தாலும் ஸ்ரீனிவாசன் அவளுக்கு எப்போதும் போல பணம் அனுப்பிக் கொண்டுதான் இருந்தார். நித்யா இந்த வருடம் ப்ளஸ் ஒன் படிக்கிறாள். அடுத்த வருடக் கடைசியில் அவளையும் கல்லூரியில் சேர்க்க வேண்டும். கண்டிப்பாக சித்தியால் பேங்கில்



போட்ட பணத்தின் வட்டியை மட்டும் வைத்துக் கொண்டு மேற்படிப்பு படிக்க வைக்க முடியாது.

அதற்கென்று பணத்தை எடுத்துவிட்டால் மூவரும் ஜீவனம் செய்ய முடியாது.

இதையெல்லாம் மிக மிக யோசித்து தன்னுடைய ஸ்டைபண்ட் பணத்தை அப்படியே சேமிக்கலானாள்.

மது அவள் நினைத்தபடியே மிகவும் நல்ல மதிப்பெண்கள் பெற்று எம்.பி.பி.எஸ். படிப்பில் தேர்வு பெற்றாள். ஸ்ரீனிவாசனிடம் தன் எண்ணத்தைத் தெரிவித்தாள். வேலைக்குச் சென்றவுடன் தனது சம்பளத்தில் ஒரு பகுதியை நித்யாவின் படிப்பிற்கு கொடுத்து உதவுமாறு அனுமதி கேட்டாள்.

அதைக் கேட்டவுடன் ஸ்ரீனிவாசனுக்கும் அவள்மேல் அளவு கடந்த அன்பும், மதிப்பும் ஏற்பட்டது. அது மெல்ல அவர் மனதில் அவளைத் தனது மருமகளாக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆசையையும் தோற்றுவித்தது.

எப்படியாவது ஷ்யாமிடம் சொல்லி சம்மதம் கேட்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டார்.

பிறகு மது கேட்டுக் கொண்டபடியே அவளது சம்பளத்தை அவள் விருப்பம் போல செலவு செய்யலாம் என்று சொன்னதோடு நில்லாமல் தனது ஆஸ்பிடலிலேயே வந்து சேர்ந்துக் கொள்ளுமாறு கூறினார்.

ஸ்ரீனிவாசனின் அன்பில் மதுரா மிகவும் நெகிழ்ந்து போனாள். ஆனால் தனக்கு இவ்வளவு உதவிகள் செய்தவரிடம் ''எனக்கு சம்பளம் கொடுங்கள்'' என்று எப்படி கேட்பது? அதுவும் அவள் அவர்களுக்கு செலவு செய்த பணத்தைத் திருப்பிக் கொடுக்கக் கடமைப் பட்டிருக்கும் போது.

அவள் மனதைப் போல படித்தவர் போல் ஸ்ரீனிவாசன் ''இதோ பாரும்மா, நீ எதை நினைத்து மிகவும் தயக்கமாக இருக்கிறாய் என்று எனக்குப் புரிகிறது. எங்கள் ஆஸ்பிடலில் வேலை பார்க்கும் மற்ற ட்யூட்டி டாக்டர்களுக்கு என்ன சம்பளமோ அது உனக்கும் உண்டு. அதனால கவலைப்படாம போய் நாளைலேர்ந்து ட்யூட்டி ஜாய்ன் பண்ணு'' என்று அவளை உற்சாகப் படுத்தி அனுப்பினார்.

ஷ்யாமிடம் தன் மனதினுள் உள்ளதை சொல்ல வேண்டும் என்று ஸ்ரீனிவாசன் நினைத்த வேளையில் அவனும் முதலில் தந்தையிடம் தனது ஆசையைத் தெரிவித்து சம்மதம் பெற்றுப் பிறகு மதுவிடம் சொல்லிவிட வேண்டும் என்று ஸ்ரீனிவாசனிடம் வந்தான்.

''டாடி, உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும்''

''அடடா என்ன ஒரு கோயின்ஸிடன்ஸ்' நானும் உங்கிட்ட ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேசணும் சரி நீயே முதலில் சொல்லு. என்ன விஷயம்?''

''டாடி மதுராவைப் பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க?''

ஸ்ரீனிவாசனுக்கு உடனே புரிந்து விட்டது. பையன் தாம் என்ன கேட்க

நினைத்தோமோ அதையேக் கேட்கிறான். எனக்கும் ஒரு வேலை கவலைமாத ஆகிற்று என்றுநினைத்துக் கொண்டவராய்,

''ஏன்? ரொம்ப நல்ல பொண்ணு. புத்திசாலி அவளைக் கட்டிக்கப் போறவன் குடுத்து வச்சவன்'' என்றார்.

''டாடி அந்தக் குடுத்து வச்சவன் நானா இருக்கணும்னு நெனைக்கிறேன். ப்ளீஸ் டாடி. இதுக்கு உங்க சம்மதம் வேணும். நீங்க சம்மதிச்சப்புறம் தான் நான் மதுராவிடம் சொல்லலாம்னு இருக்கேன்''

''மைடியர் பாய், நீயும் காதல் என்கிற வலையில மாட்டிக்கிட்டியா, வெல். பொண்ணுக்காக உன்னோட காதலை நான் ஒப்புக்கிறேன். அந்தப் பொண்ணு கண்ணுல ஒரு சொட்டுத் தண்ணீர் வராம பார்த்துக்கணும். ஓகே?''

''என்ன டாடி இது. பொண்ணு வீட்டுக்காரங்க பேசறது மாதிரி பேசறீங்க''

''யெஸ், மை பாய் அவ எனக்குப் பொண்ணு மாதிரிதான். நான் போய் என்னோட பையனைக் கல்யாணம் பண்ணிக்கிறியான்னு அவகிட்டப் போய்க் கேக்கட்டுமா? இல்லை நீயே போய்...''

''ஐயையோ, நீங்க கேட்டீங்கன்னா அவ பயந்திடுவா நான் இன்னும் அவகிட்ட இதப் பத்திப் பேசவே இல்லை. பேசிவிட்டு உங்ககிட்ட சொல்றேன். எனிவே ரொம்ப தேங்க்ஸ் டாடி''

ஸ்ரீனிவாசன் கூறியபடி மதுரா அவர்கள் ஆஸ்பிடலிலேயே ட்யூட்டி டாக்டராக சேர்ந்தாள். அவள் சேமித்து வைத்திருந்த ஸ்டைபண்ட் பணம் கணிசமான ஒரு தொகையாயிருந்தது. எங்கே தான் அனுப்பினால் சித்திப் பெற்றுக் கொள்வார்களோ, மாட்டார்களோ என்று நினைத்து ஸ்ரீனிவாசனிடமே கொடுத்து அனுப்பி வைக்கச் சொன்னாள். பணமும் பெற்றுக் கொள்ளப்பட்டது. ஸ்ரீனிவாசன் நர்ஸிங்ஹோமிலேயே மதுராவும் டாக்டராக இருக்கிறாள் என்ற செய்தி கமலாவையும் எட்டியது. சென்னையிலேயே இருக்கிறாள் என்பது தெரிந்ததும் அவளை சந்தித்து வீட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று ஒரு முறை கூட அவள் நினைக்கவில்லை: எப்படியோ நினைத்தப்படி டாக்டராகி விட்டாளே என்ற உணர்வு அவளுள் கனன்றுக் கொண்டிருந்தது.

மதுவிற்கு அடுத்து பெண்களுக்கான பிரத்தியேக பிரிவு கைனகாலஜியில் எம்.டி. செய்ய வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. நித்யாவை நல்லபடியாக அவள் நினைத்த கல்லூரியில் சேர்த்து விட்டுப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று இருந்தபோது ஷ்யாம் அவளை வற்புறுத்தி எம்.டி.க்கான என்ட்ரன்ஸ் பரீட்சை எழுத வைத்தான். அவள் தேர்வுக்கு தயாரான நிலையில் இல்லாதிருந்த போதும் எம்.பி.பி.எஸ் படிக்கும் போது விடுமுறை நாட்களில் படித்து வைத்திருந்தது இப்பொழுது கை கொடுத்தது.

புத்திசாலிப் பெண் மதுரா, இந்தத் தேர்விலும் வெற்றி பெற்று விட்டாள். கவுன்சிலிங்கில் அவள் விருப்பப்பட்ட கைனகாலஜியே கிடைத்தது அதுவும் ஷ்யாம் படித்த எம்.எஸ்.வி யிலேயே கிடைத்தது. அவளுக்கு



மகிழ்ச்சியை அளித்தது.

எம்.டி. கிடைத்து விட்டதால் ஸ்ரீனிவாசனிடம் அனுமதி பெற்று மாலையிலிருந்து இரவு 10 மணிவரை நர்ஸிங்ஹோமிற்கு சென்றுக் கொண்டிருந்தாள். கிடைத்த ஸ்டைபண்டில் தனது அத்தியாவசியத் தேவை போக மீதியை ஸ்ரீனிவாசனுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று சேமிப்பில் போட்டு வைத்தாள்.

காலையிலிருந்து மாலை வரை எம்.எஸ்.வி. பிறகு நர்ஸிங்ஹோமில் வேலை என்ற ஓய்வின்றி உழைத்தாள். ட்யூட்டி முடிந்ததும் ஆஸ்பிடல் காரிலேயே ஹாஸ்டலுக்குப் போகுமாறு ஸ்ரீனிவாசன் கூறியிருந்தார்.

அன்று ஷ்யாமிற்கு சிறிது நேரம் கிடைத்ததால் ஹாஸ்டலுக்குப் புறப்படத் தயாரான மதுராவிடம் தானே தனது காரில் அழைத்துச் செல்வதாக கூறினான்.

காரை நிதானமாக ஓட்டிச் சென்று ஒரு ரெஸ்டாரெண்ட் முன்னால் நிறுத்திய ஷ்யாமை மதுரா வியப்புடன் நோக்கினாள்.

''ஏன் இங்கே நிறுத்திட்டீங்க ஷ்யாம்? ஹாஸ்டலுக்கு இப்பவே நேரமாயிடுச்சு''

''மது எனக்காக கொஞ்சம் உன்னோட நேரத்தை ஒதுக்கறியா? உன்னிடம் நிறையப் பேச வேண்டும். ஹாஸ்டல் வார்டன் கிட்ட நான் சொல்லிக்கிறேன் இறங்கி வா''

பிறகு உண்பதற்கு ரொட்டி, நான், பனீர்பட்டர்மசாலா, பாலக்பனீர் என்று ஆர்டர் செய்துவிட்டு மதுவிடம் மெல்ல ஆரம்பித்தான்.

''மது நான் ரொம்ப நாளாகவே உங்கிட்ட சொல்லணும்னு' என் மனசில பூட்டி வச்சிருக்கிறது. இப்ப சொல்றேன் எனக்கு சுத்தி வளைச்சுப் பேசத் தெரியாது. அத நான் விரும்பவும் மாட்டேன். உன்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசைப்படறேன். உனக்கு சம்மதமா?''

இதைச் சொல்லத்தான் தன்னை அழைத்து வந்திருக்கிறான் என்பதை அவள் முன்பே ஊகித்து விட்டிருந்தாள்.

''ஷ்யாம் எப்ப நீங்க என்னைத் தேடி அடிக்கடி தஞ்சாவூர் வர ஆரம்பிச்சீங்களோ அப்பவே எனக்குத் தெரியும். நீங்க என்னை விரும்பறீங்கன்னு. ஆனா உங்க காதலை ஏத்துக்கற அளவுக்கு எனக்கு அருகதை இல்லைன்னு நினைக்கறேன்.

உடம்பிட்ட உங்களுக்கு ரொம்ப நன்றியா இருக்கணும்னு நினைக்கிறேன். என்னோட முழு உழைப்பையும் ஹாஸ்பிடலுக்கே அர்ப்பணம் பண்ணனும்னு நினைக்கிறேன். என்னோட நிலைமை நான் எடுத்துச் சொல்லி உங்களுக்குப் புரிய வைக்கணும்னு அவசியமில்லை என்பது எனக்குத் தெரியும். என்னோட தங்கச்சியையும், தம்பியையும் நல்லாப் படிக்க வைக்கணும் என்பதுதான் என்னோட இப்போதைய லட்சியம். ஏற்கெனவே டாக்டர் படிப்புதான் முக்கியம்னு வீட்ட விட்டுப் போயிட்டான்னு சித்தி என்னை ஒதுக்கியே வெச்சிட்டாங்க. இந்த நிலைமையில, நான் கல்யாணமும் பண்ணிக்கிட்டேன்னா அவங்க என்னைப் பத்தி நினைக்கிறத உறு

நிப்படுத்தற மாதிரி ஆயிடாதா? ஷ்யாம் நீங்க ரொம்ப ரொம்ப நல்லவர், உங்களுக்கு என்னைவிட மிகச்சிறந்த பொண்ணு கிடைப்பா. நீங்க வாழ்க் கையில ரொம்ப நல்லா இருக்கணும். எங்கம்மா உயிரோட இருந்தப்ப சொன்னது எனக்கு லேசா ஞாபகமிருக்கு. டாக்டராகி சேவை செய்யணும் னாங்க.

அதனால உங்க நர்ஸிங்ஹோம்தான் நிழலில்லாம இருக்கிற எனக்கு ஆலமரமா நிழல் தருது. என்னோட வாழ்நாளை இப்படியே கழிக்கணும் ஙுதான் நான் ஆசைப்படறேன்''

''இங்கப்பாரு. எனக்குத் தெரியும். யாரைக் கல்யாணம் பண்ணிக்க ணும்னு என்னோட மனசில இருக்கிறவ இன்னிக்கு மட்டுமில்ல. என்னிக் குமே மதுராதான். அதுல சந்தேகமே வேண்டாம். உனக்கு கல்யாணம் வேண்டாம்னா எனக்கும் வேண்டாம். என்னை இன்னொருப் பொண் ணைக் கல்யாணம் பண்ணிக்கோன்னு தயவு செஞ்சு சொல்லி என் மனசை காயப்படுத்தாத மது. மது நான் உன் மேல உயிரையே வெச்சிருக்கேண்டா. உனக்காக எத்தனை வருஷம் வேணாலும் நான் காத்திருப்பேன். என்ன இப்போ, உன்னோட கடமையா நீ நெனக்கறது நிறைவேத்தணும், அவ் வளவுதானே. அது முடிஞ்சதும் கல்யாணம் பண்ணிக்கறோம். இதுல எந்த மாற்றமும் இல்ல. ஓ.கே.! இதைப்பத்தி டாடிகிட்ட ஏற்கனவே நான் பேசி யாச்சு. அவர் எப்ப என் மருமகளை வீட்டுக்கு அழைச்சிட்டு வருவேன்னு கேக்கறார். அதனால அவர் என்ன சொல்வாரோ என்ற பயமும் உனக்கு வேண்டாம்.''

ஷ்யாம் இப்படிப் பேசுவான் என்று மதுரா எதிர்பார்க்கவில்லை. மன தின் ஒரு புறம் மிகவும் சந்தோஷமாக இருந்தது. தனக்காக இவ்வளவு நல்ல மனிதர் காத்திருக்க வேண்டுமா என்ற வருத்தமும் ஏற்பட்டது.

எப்பொழுதும் ஹாஸ்டலுக்கு வந்து உணவருந்திவிட்டு சிறிது நேரம் படித்துக் கொண்டிருப்பவள் இன்று மிக விரைவிலேயே உறங்கிப் போனாள்.

## 8

நித்யாவும் படிப்பில் மதுராவிற்கு சளைத்தவளல்ல. மிக வும் நன்றாகவேப் படித்தாள். ஆனால் அவள் மனதில் எந்தவித இலட்சியமும் இல்லாமலிருந்தது. அதற்குக் காரணம் அவள் தந்தையின் அகால மரணம். தந்தை இறந்த பிறகு அவளுக்கு எதிலும் நம்பிக்கை இல்லா மல் போய்விட்டது. இப்பொழுது பேங்கில் இருக்கும் பணத்தின் வட்டியில் மேலே படிப்பது என்பது இயலாத காரி யம் என்று நன்றாகவே புரிந்துகொண்டிருந்தாள்.

மதுவை மேலே படிக்க விடாமல் வேலைக்கு அனுப்ப வேண்டு மென்று நினைத்தாள் கமலா. ஆனால் விதி அவள் சொந்த மகளையே மேலே படிக்க விடாமல் செய்து விடுமோ என்று எண்ணிக் கலங்கினாள். சூர்யாவிற்கோ சுத்தமாக படிப்பு வரவில்லை. நித்யாவை இருக்கும் பணத்



தில் எப்படியாவது கல்லூரியில் சேர்த்து விட வேண்டுமென்று நினைத் தாள்.

அதற்கு அவசியமில்லை என்பது போல மதுரா சேர்த்து வைத்துக் கொடுத்த பணத்தை சீனிவாசன் அனுப்பியிருந்தார். கமலாவிற்கு சந்தோ ஷம் தாங்கவில்லை. நித்யாவிடம் பணம் கிடைக்கப்பெற்ற விஷயத்தைக் கூறினாள்.

''நித்யா ஆஸ்பத்திரியிலிருந்து டாக்டர் பணம் அனுப்பியிருக்காரு. படிப்புக்கு ஆகுற செலவ எப்படி சமாளிக்கலாம்னு கொஞ்சம் கவலைப் பட்டேன். கடவுள் வழி காட்டிட்டாரு. நீ போய் காலேஜ் அப்ளிகேஷன் வாங்கிட்டு வா. அப்படியே என்னவோ ஸி.ஏ.கோச்சிங் க்ளாஸ்னு என் னவோ சொல்லிக்கிட்டிருந்தியே, அதப்பத்தியும் விசாரிச்சுட்டு வா'' என் றாள்.

நித்யாவிற்கு ஒன்றும் புரியவில்லை. தந்தையின் செட்டில்மெண்ட் பணத்தையெல்லாம் கொடுத்து விட்டார்கள். பிறகு அவ்வப்போது எதற் குப் பணம் அனுப்புகிறார்கள் என்ற வினா அவள் மனதில் எழுந்தது. மதுரா, ஸ்ரீனிவாசன் நர்ஸிங்ஹோமில் வேலை பார்ப்பது நித்யாவிற்கும் தெரியும். ஒன்றையொன்று சம்பந்தப்படுத்திப் பார்த்ததில் அவளுக்கு அது மதுரா அனுப்பிய பணம்தான் என்பது தெளிவாகத் தெரிந்தது.

அதைக் கமலாவிடம் தெரிவிக்க வேண்டாம் என்று நினைத்துக் கொண்டாள். ஆனால் மதுராவின் பணத்தில், தான் அப்படியாவது படிக்க வேண்டுமா என்றக் கேள்வி அவள் மனதைக் குடைந்தது.

மதுரா டாக்டருக்குப் படிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டதினா லேயே அவளுக்குக் கண்டிப்பாகத்தான் அதை படிக்கக் கூடாதென்று நினைத்தாள். அதனால் ஸயின்ஸ் குரூப் விடுத்து காமர்ஸ் குரூப்பும் எடுத் துக் கொண்டு ஸி.ஏ.படிக்க வேண்டுமென்று விரும்பினாள். அதன்படி காமர்ஸ் குரூப் எடுத்துக் கொண்டாள். பிளஸ்டூவில் நல்ல மதிப்பெண்கள் வாங்கவேண்டும் என்று பக்கத்தில் கோச்சிங் கிளாசில் சேர்ந்துக் கொண் டாள். கோச்சிங் க்ளாஸ் நடத்தும் ஹுசைனின் பாயின் மகன்தான் அன் வர். அவன் ஐ.டி.ஐ. முடித்துவிட்டு துபாய் போவதற்காக முயற்சி செய்துக் கொண்டிருந்தான்.

அப்பொழுதுதான் நித்யாவிற்கு அன்வருடன் பழக்கம் ஏற்பட்டது. கமலாவிடம் சொன்னால் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ள மாட்டாள் என்று தெரியும், அதே போல் ஹுசைன் பாயும் இதற்கு சம்மதிக்க மாட்டார். அதனால் இருவரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தனர். அன்வர் தனது பாஸ் போர்ட், விசா எல்லாம் தயார் செய்கையில் நித்யாவையும் விண்ணப்பிக் கச் சொல்லியிருந்தான். நித்யாவும் அங்கு ஏதாவது ஒரு வேலைக்கு முயற்சி செய்யும் சாக்கில் அன்வருடன் சென்று விடலாம் என்று இருவரும் திட்ட மிட்டிருந்தனர்.

கமலாவிடமும் நித்யா எப்பொழுதோ ஒரு முறை துபாயில் வேலைக்கு விண்ணப்பித்திருப்பதைப் பற்றி சொல்லியிருந்தாள். ஆனால்

கமலா, அதெல்லாம் வேண்டாம் என்று ஒரேடியாக மறுத்து விட்டதால் நித்யா மேற்கொண்டு அதைப் பற்றி எதுவும் பேசவில்லை.

நித்யா ப்ளஸ் டூ தேர்வில் அதிகமாகவே மதிப்பெண்கள் வாங்கியிருந்தாள். அதை விட அன்வருக்கும் ஒரே சமயத்தில் பாஸ்போர்ட், விசா இரண்டுமே கிடைத்தது பற்றி அவளுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது.

அவளுக்கு துபாயில் ஒரு டிபார்ட்மெண்டல் ஸ்டோரில் வேலை கிடைத்திருந்தது. அவளுக்கு வேலை பார்க்க வேண்டும் என்ற எண்ணமு[ம்] இல்லை. எப்படியாவது அன்வருடன் சென்று விட வேண்டும் என்பதே அவள் நோக்கமாக இருந்தது.

இருவரும் பேசியிருந்தபடி ரிஜிஸ்டர் அலுவலகத்தில் திருமணம் செய்து கொண்டனர். பிறகு அவரவர் வீட்டிற்குச் சென்று விட்டனர். இன்னும் இரண்டு நாட்களில் புறப்படுவதாக ஏற்பாடும் செய்திருந்தனர். நித்யாவிற்கு தன்னையே மலையாக நம்பியிருக்கும் தன் தாயை ஏமாற்றுகிறோம் என்று சிறிது வருத்தமாயிருந்தது. அதே சமயம் மதுராவின் பணத் ... இல் படிக்கவோ, வாழவோ அவளுக்குத் துளியும் விருப்பமில்லை. தன்னை உயிருக்கு உயிராக காதலிக்கும் அன்வரை விடவும் அவளுக்கு மனதில்லை. தம்பி சூர்யாவை நினைத்து பரிதாபப்பட்டாள். துபாய் சென்றதும் எப்படியாவது சூர்யாவையும் அழைத்துக் கொண்டு விட வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

நினைத்தது அனைத்தையும் ஒரு கடிதத்தில் எழுதி வைத்து விட்டு திட்டமிட்டபடியே அன்வருடன் பறந்து விட்டாள்.

கடிதத்தைப் படித்த கமலாவிற்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. பிறகு எல்லாம் உறைக்கவே, கடிதத்தையெடுத்துக் கொண்டு ஹுஸைன் பாய் வீட்டிற்கு ஓடினாள்.

அங்கும் ஒரு எரிமலை உருவாகியிருந்தது. திருமணம் செய்து கொண்டதைப் பெற்றோரிடமே மறைத்த அவரது மகனைப் பற்றிய எந்தப் பேச்சும் வேண்டாம் என்று ஹுஸைன் பாய் கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

கமலா நாடி, நரம்பெல்லாம் தளர்ந்து போய் வீடு திரும்பினாள். நம்பிக்கை துரோகம் செய்த மகளை நினைத்து மனம் புழுங்கியது. அக்கம் பக்கமெல்லாம் என்னவெல்லாம் பேசுவார்கள் என்று நினைத்துப் பார்த்து மனமுடைந்து அழுதாள். அதற்குப் பிறகு ஏமாற்றிய மகளைப் பற்றி ஒரு கணமும் நினைத்துப் பார்க்கக் கூடாது என்று உறுதி பூண்டாள்.

அதன் பிறகு கமலாவின் உடல்நிலை கொஞ்சம் கொஞ்சமாக சி...யத் தொடங்கியது. நித்யா ஏமாற்றியது கமலாவின் மனதை வெகுவாக பாதித்திருந்தது. அது போதாதென்று சூர்யாவின் நடவடிக்கைகள் வேறு சரியில்லை என்பதை கமலா மிகவும் தாமதமாக உணர்ந்தாள். சரியாக சாப்பிடுவதில்லை, பள்ளிக்கும் ஒழுங்காக செல்வதில்லை.

எப்பொழுதும் ஏதோ யோசனையிலிருப்பவன் போல எதையாவது வெறித்துப் பார்ப்பது போன்ற அவனது நடவடிக்கைகள் கமலாவிற்கு கவலையை அளித்தது. இதற்கிடையில் பணம் வேறு அவ்வப்போது காணா



மல் போனது.

கமலா, தான் செலவு செய்திருப்போம் என்று தான் நினைத்தாள். ஆனால் பணத்தை அவ்வப்போது எடுத்தது சூர்யாதான் என்பது அப்போது அவளுக்குத் தெரியாது. ஆம், சூர்யா சிறுக சிறுக போதை மருந்துக்கு அடிமையாகியிருந்தான். அவனுடன் பழகிய சில மாணவர்களால் இந்தப் பழக்கத்திற்கு ஆளாகிவிட்டான். அதற்கு பணம் தேவைப்பட்ட போது அம்மாவிடம் பொய் சொல்லி வாங்குவான். இனி பொய் சொல்ல முடியாது என்ற கட்டத்தில் வீட்டிலிருந்து பணத்தை மெல்ல எடுக்க ஆரம்பித்தான்.

இதற்கிடையில் கமலாவிற்கு கண்களில் அவ்வப்போது பார்வை மங்க ஆரம்பித்தது. டாக்டரிடம் காண்பித்த போது வெள்ளெழுத்தாக இருக்கலாம் என்று கண்ணாடி அணிந்துக் கொள்ளச் சொன்னார். கண்ணாடி அணிந்த பின் கண் பார்வை நன்றாகத் தெரிந்தது. கமலாவிற்கும் வேறொன்றுமில்லை என்று நிம்மதியாக இருந்தது. ஆனால் அந்த நிம்மதி வெகுநாட்களுக்கு நீடிக்கவில்லை. மீண்டும் பார்வை மங்க ஆரம்பித்தது. ஆனால் டாக்டர்களுக்கு காரணம் என்ன என்பது புரியாததாக இருந்தது. டாக்டர் கொடுத்த சொட்டு மருந்தை கண்களில் இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறை போட்டால்தான் கண்கள் சிறிதேனும் தெரிந்தன. நித்யா வீட்டை விட்டுப் போனது, சூர்யாவின் புதிரான போக்கு என்று எல்லாம் சேர்ந்து கமலாவை ஒடுக்கி விட்டது. உடம்பும் மனதும் ஒருசேரக் களைத்துப் போயிருந்தாள். சூர்யாவிற்கு போதைமருந்து பழக்கமிருப்பது பாவம் அவளுக்குத் தெரியாது.

ஏற்கெனவே சூர்யா பற்றிய விஷயங்கள் கமலாவிற்கு தெரியாது. இப்பொழுது கண்களில் பார்வை மங்கிய பிறகு அவனைப் பற்றி ஒன்றுமே தெரியாது போயிற்று. சாப்பிடும் சமயத்தில் ஏதாவது கேட்கலாம் என்றால் கோபம் கொண்டு சாப்பாட்டை விட்டு எழுந்து போய்விடுவான். வேறு சமயங்களில் வீட்டில் இருப்பதே இல்லை. பேங்கிற்குச் சென்று பணம் எடுத்து வருவது கூட கமலாவிற்கு மிகவும் கடினமாக இருந்தது.

நித்யா வீட்டை விட்டுச் சென்றது மதுராவிற்கு ஸ்ரீனிவாசன் மூலம் தெரிய வந்தது. செய்தி அறிந்தவுடன் அவளுக்கு நித்யாமேல் முதன்முறையாகக் கோபம் வந்தது. அவள் திருமணம் செய்து கொண்டதற்காக மது கோபப்படவில்லை. எல்லாவற்றையும் மறைத்து விட்டாளே என்று மிகவும் வருத்தமடைந்தாள்.

தந்தை இருந்திருந்தால் இதெல்லாம் நடந்திருக்குமா என்று தந்தையை நினைத்துக் கலங்கினாள். அவளை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்ற ஆசை நிராசையாகிவிட்டதே என்று வேதனைப்பட்டாள்.

கமலாவை உடனே சென்று பார்க்க வேண்டுமென்று தோன்றியது. ஆனால் இவ்வளவு நாட்கள் போகாமல் இருந்து விட்டு இப்பொழுது சென்றால், வேண்டுமென்றே விசாரிப்பதற்கு சென்றதாக சித்தி நினைத்துக் கொள்வாள் என்று யோசித்தாள். சிறிது நாட்கள் செல்லட்டும் பிறகு போய் பார்த்து வருவோம் என்று தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொண்

டாள்.

ஷ்யாமிற்கு விஷயம் தெரிந்தாலும் மதுவிடம் அவன் அதைப் பற்றி பிரஸ்தாபிக்கவில்லை. எங்கே கேட்டால் அவள் மனம் கஷ்டப்படுமோ என்று கேட்கவே இல்லை.

## 9

சூர்யாவின் நிலைமை நாளடைவில் மிகவும் மோசமாகிக்கொண்டே போனது. வீட்டில் கமலாவிடம் பணம் கேட்டு மிகவும் துன்புறுத்தத் தொடங்கினான். கமலாவிற்கு முதன் முறையாக, தான் மதுராவிற்கு இழைத்த கொடுமைகள் தன்னையே திரும்பத் தாக்குவதாகத் தோன்றியது. தான் செய்தது தவறு என்ற உணர்வு மேலிட ஆரம்பித்தது. சின்னப்பெண்ணை விரட்டியடித்து விட்டோமே என்ற குற்ற உணர்வு அவளை ஆட்கொண்டது. சிவராமன் இறந்து போன போது தன் மகளைப் பற்றி என்னவெல்லாம் நினைத்திருப்பாரோ என்று எண்ணி அவள் மனம் வேதனைப்பட்டது. மதுரா, ஸ்ரீனிவாசன் நர்ஸிங் ஹோமில் தான் வேலை பார்க்கிறாள் என்று தெரிந்தும் அவளை ஒருமுறை கூடச் சந்திக்க முயற்சிக்கவில்லையே என்று வருந்தினாள்.

ஏனோ அவளுக்கு உடனே மதுராவைப் பார்க்க வேண்டும் என்று தோன்றியது. ஆனால் இப்பொழுது துன்பமான சூழ்நிலையில் அவள் தன்னைப்பற்றி என்ன நினைப்பாள்? என்று யோசித்து அந்த நினைவை அகற்றினாள்.

தான் செய்த தவறுக்கு தண்டனை அனுபவித்து தான் ஆக வேண்டும் என்று கருதி வீட்டினுள்ளேயே அடைபட்டுக்கிடந்தாள்.

கண்களின் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே போனது. சொட்டு மருந்து போட்டவுடன் சுமாராகத் தெரிந்த பார்வை சிறிது சிறிதாக மருந்து போட்டும் மங்கத் தொடங்கியது. சமையல் செய்வதே மிகவும் கடினமாக இருந்தது. ஏதோ தட்டுத் தடுமாறி பெருக்கி சமைத்து வைத்தாள். இதன் நடுவில் சூர்யா போதை மருந்து பழக்கத்திற்கு முழுதும் அடிமையாகிப் போனான். பணம் அதிகமாகத் தேவைப்பட்டதால் கமலாவின் நகைகள் ஒவ்வொன்றாகக் காணாமற் போயின.

அன்று காலை ஏதோ ஒன்றை பெயருக்கு சமைத்து வைத்துவிட்டு தலை சுற்றுவது போல் உணர்ந்ததால் படுத்துக்கொண்டாள். சூர்யா காலையில் வீட்டை விட்டுக் கிளம்பினால் இரவு வெகுநேரம் கழித்து வீடு திரும்புவதால் கமலா உடல் நலமின்றி படுத்துக் கிடந்தது அவனுக்குத் தெரியாது.

நீண்ட நேரம் படுத்திருந்துவிட்டு நேரமாகி விட்டதே என்று சட்டென்று எழுந்தால், திரும்பவும் தலை சுற்றி மயக்கம் வருவதைப் போல் உணர்ந்தவள் தன்னால் எதையும் பார்க்க முடியவில்லை என்பதையும் உணர்ந்தவுடன் மனதில் ஏற்பட்ட பீதியில் திரும்பவும் மயக்கத்திற்குப் போனாள்.



சூர்யா வீட்டிலேயே இருப்பதில்லை என்று, ஏதாவது அவசரத் தேவைக்கு வேண்டுமென்றால் பக்கத்து வீட்டுப் பையனிடம் சொல்லி வாங்கி வரச் சொல்வாள். அன்றும் காலையில் அந்தப் பையனிடம் சில சாமான்கள் வாங்கி வரச் சொல்லியிருந்தாள். அவன் வந்து வெகுநேரம் கதவைத் தட்டிப் பார்த்துவிட்டு கமலா கதவைத் திறக்காததால் ஜன்னல் வழியே எட்டிப்பார்த்து கமலா மயக்கமாகிக் கிடப்பதைக் கண்டு கலவரமடைந்தான். அவன் தாயிடம் சொல்லி அழைத்து வந்தான். அவனுடைய தாய் பலமுறை ஜன்னல் வழியே கூப்பிட்டுப் பார்த்தும் பலனில்லாமல் போகவே அவனை மதுரா வேலை பார்க்கும் ஹாஸ்டலுக்கு அனுப்பினாள். எப்பொழுதும் மதுராவைப் பற்றிக் குறை கூறிக்கொண்டிருக்கும் கமலா பேச்சுவாக்கில் ஸ்ரீனிவாசன் நர்ஸிங்ஹோமில் தான் மதுரா வேலை பார்க்கிறாள் என்று பக்கத்து வீட்டுப் பெண்ணிடம் கூறியது இப்போது உதவியது.

செய்தி அறிந்ததும் மதுராவிற்கு கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. அன்று மதியத்திற்கு மேல்தான் எம்.எம்.வி. போக வேண்டியிருந்ததால் அதிர்ஷ்டவசமாக ஆஸ்பிடலில் தான் இருந்தாள். இருந்த பரபரப்பில் பக்கத்தில் இருந்த டியூட்டி டாக்டரிடம் மட்டும் கூறிவிட்டு உடனே ஓட்டமாக ஓடி வந்தாள்.

அதற்குள் அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் ஜன்னல் வழியே லாவகமாக உட்புறத் தாழை நீக்கிக் கதவைத் திறந்திருந்தனர். இவ்வளவு நடந்தும் கமலா கண்விழிக்கவில்லை. மது உடனே ஆஸ்பிடலில் சேர்த்து உடனடி சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்தாள். கமலாவிற்கு திடீரென்று ஏற்பட்ட பயத்தின் காரணமாக இரத்த அழுத்தம் அதிகமாகி மயங்கி விட்டிருந்தாள். உடனடியாக ஆஸ்பிடலில் சேர்க்காமல் போயிருந்தால் அது மூளையை பாதித்திருக்கக்கூடும் என்று சிகிச்சை அளித்த டாக்டர் கூறினார். தீவிர சிகிச்சை அளித்தும் கமலாவிற்கு இரண்டு நாட்கள் கழித்தே நினைவு திரும்பியது.

ஆனால் பார்வை மட்டும் திரும்பவில்லை.

நினைவு திரும்பி தான் எங்கே இருக்கிறோம் என்று தெரிந்தவுடன் ஒரு பக்கம் மனதிற்கு நிம்மதியாக இருந்தாலும் மறுபக்கம் குற்ற உணர்வு குறுகுறுத்தது.

மதுவோ, இந்த இரண்டு நாட்களில் காண்பவரிடமெல்லாம், தனக்குத் தெரியாமல் போய்விட்டதே என்று புலம்பித் தீர்த்தாள். ஸ்ரீனிவாசனும், ஷ்யாமும் உட்கார வைத்து இப்பொழுதாவது தெரிய வந்து கமலாவின் உயிரைக் காப்பாற்ற முடிந்ததே என்று சமாதானம் கூறிய பின்பு தான் சற்றுத் தெளிவானாள். சித்தியின் கண்கள் இப்படி பாதிக்கப்பட்டு விட்டதே என்று வருத்தப்பட்டவள் ஷ்யாம் கூறியபடி உயிரைக் காப்பாற்ற முடிந்ததே என்று நிம்மதியானாள்.

கமலா இருக்கும் ஐ.ஸி.யு. அறைக்குள் நுழைந்தாள். கமலாவிற்கு சிறிது முன்புதான் நினைவு திரும்பியிருந்தது. மதுரா அருகில் சென்று

'இப்ப எப்படி இருக்கீங்க சித்தி?' என்று அன்போடு வினவினாள். கமலா அதைக் கேட்டவுடன் உடைந்து போய் அழ ஆரம்பித்தாள்.

"மதுரா, என் செல்லமே, உனக்கு நான் செஞ்சதுக்கெல்லாம் ஆண்டவன் என்னைத் தண்டிச்சிட்டார். உன்னைப் பார்க்கக்கூட அருகதை எனக்கு இல்லைன்னுதான் என் கண்களையும் பிடுங்கிட்டான். ஆனா ஒரு விதத்தில உன்னைத் திருப்பி எங்கிட்ட சேர்த்த ஆண்டவனுக்கு நான் நன்றி சொல்றேன்".

இப்பொழுதுதான் உடல்நிலை சிறிது பரவாயில்லை என்ற நிலையில் கமலா உணர்ச்சிவசப்பட்டு அழுதது மீண்டும் அவளை பாதிக்கக்கூடும் என்று மதுரா பதறினாள்.

"ஐயோ சித்தி, ஏன் தேவையில்லாததையெல்லாம் பேசறீங்க? நீங்க எனக்கு என்ன மூணாம் மனுஷியா? நான் இருக்கேன் உங்களுக்கு. எதப் பத்தியும் யோசனை செய்யாம மருந்தெல்லாம் சாப்பிட்டுட்டு ஓய்வெடுக்கணும் புரிஞ்சுதா? முதல்ல உடல்நிலை சரியாகட்டும். பிறகு கண்களுக்கும் சிகிச்சை எடுக்கலாம். அதனால கவலையே படாதீங்க" என்று தேற்றினாள்.

தக்க நேரத்தில் உடனடி சிகிச்சை எடுத்ததனால் கமலாவின் உடல்நிலை மெதுவாகப் பழைய நிலைக்கு வந்தது. ஐ.ஸி.யு. அறையிலிருந்து சாதாரண அறைக்கு மாற்றியிருந்தார்கள். இந்த ஒரு வார காலத்தில் ஆஸ்பிடலுக்கு வந்த சூர்யாவின் போக்கில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை உணர்ந்த மதுரா, அதுபற்றி கமலாவிடம் அவள் மனதை பாதிக்காத வண்ணம் கேட்டாள். கமலா சூர்யாவின் நடவடிக்கைகளைப் பற்றி எல்லாவற்றையும் கூறியவுடன், மதுரா, சூர்யா வந்தவுடன் இது பற்றி விசாரிக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

சூர்யா, முதலில் மதுவிற்கு பிடி கொடுத்து பதிலளிக்கவில்லை. அவளை சந்திப்பதையே தவிர்க்க முயற்சித்தான். மதுராவும் சளைக்காமல் தூண்டித் துருவிக் கேட்டவுடன் சூர்யாவும் மிகவும் கலங்கிப் போய் தனது நிலைமையை எடுத்துரைத்தான். கமலாவின் நகைகளையெல்லாம் எடுத்து விற்றபின் வேறு எந்த வழியிலும் பணம் கிடைக்காததனால் மருந்துக் கிடைக்காமல் தவித்துக் கொண்டிருப்பதைக்கூறி அழுதான். இதைக் கேட்ட மதுரா மிகவும் அதிர்ச்சியடைந்தாள். ஒரு கணம் தன்னைப்பற்றித் தான் மிகவும் சுயநலமாக இருந்து விட்டோமோ என்று கூட எண்ணினாள். தான் அங்கேயே இருந்திருந்தால் இவ்வாறெல்லாம் ஆகியிருக்காதோ என்று அவள் மனம் புலம்பியது.

தம்பியின் நிலையைப் பார்த்து மிகவும் பரிதவித்தாள். தன் தந்தை இருந்த போது சந்தோஷமாக இருந்த குடும்பத்திற்கு இப்படி நேர்ந்து விட்டதே என்று அவள் மனம் வருந்தியது. தான் டாக்டராக வேண்டும் என்ற இலட்சியம் கொண்டது தவறோ என்று மீண்டும் தன் மேலேயே தவறு இருப்பதாக நினைத்தாள்.

பிறகு தம்பியிடம் "சூர்யா நடந்ததையெல்லாம் மறந்திடு. சித்தி நல்



லபடியா குணமாகட்டும். உன்னை நான் பார்த்துக்கறேன். கவலைப்படாதே" என்று ஆறுதல் கூறி அனுப்பிவிட்டு கமலா இருக்கும் அறையில் வந்து அமர்ந்துகொண்டு யோசித்து, சூர்யாவின் நிலைமை மோசமாகிப் போவதால் அவனை 'டி அடிக்ஷன் சென்டரில்' சிறிது நாட்கள் சேர்த்து குணமாக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தாள். சித்தி இருக்கும் உடல் நிலையில் இப்போது கூறினால் அது அவள் உடல்நிலையைப் பாதிக்கும் என்பதால் கமலாவிடம் சொல்லாமலேயே செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள். பிறகு கமலாவிடம் சென்று விசாரித்தாள்.

"சித்தி எப்படியிருக்கீங்க? நல்லாத் தூங்கினீங்களா? பசி நல்லா எடுக்குதா?" என்று கேட்டாள்.

கமலாவிற்கு மதுராவின் குரலைக் கேட்டதுமே மிகவும் சந்தோஷமாக இருந்தது.

"வாம்மா, மது நல்லாத் தூங்கினேன். சாப்பாடு இனிமேல்தான் வரும். பசியெல்லாம் நல்லா இருக்குது. நீ இன்னும் எம்.எம்.ஸி.க்குப் போகலையா? நேத்தே காலைல போயிட்டு சாயந்திரம்தான் வருவேன்னு சொன்னியே?"

"இல்ல சித்தி இன்னியிலிருந்து ரெண்டு மாசத்துக்கு நைட்ல லேபர் வார்டுல டெலிவரி பாக்கணும். அதனால சாயங்காலம் கிளம்பிப் போனேன்னா காலைலதான் வருவேன். காலை நேரத்தில இங்கேதான் இருப்பேன். பரீட்சையும் இன்னும் ஆறு மாசத்தில வர்றதனால காலைல படிக்கறதுக்கும் கொஞ்சம் நேரம் கிடைக்கும்."

"அதெல்லாம் நீ நல்லாப் படிச்சிருவம்மா. ஆண்டவன் அருள் உனக்கு நெறையவே இருக்கு. நீ நல்லா இருப்ப"

"சரி அத விடுங்க சித்தி. நான் ஒன்னு கேப்பேன் நீங்க மறுப்பு எதுவும் சொல்லாம உடனே சரின்னு சொல்வீங்களா?"

"மது நீ எது வேணும்னாலும் கேளு. என்னால முடியாத ஒன்னா இருந்தாக்கூட உனக்காக எப்படியாவது செய்வேன். நீ கேட்டு நான் மறுப்பேனா? சொல்லு நான் என்ன செய்யணும்?"

"சித்தி நான் ஹாஸ்டல விட்டுட்டு இங்கே ஆஸ்பிடல் பக்கத்திலேயே ஒரு வீடு பாத்துக்கலாம்னு இருக்கேன். ஆனா அந்த வீட்டுல நான் தனியா இருக்கப் போறதில்லை. கூட நீங்களும் என்னோட இருக்கப் போறீங்க. என்னடா என்னை மட்டும் கூப்பிடுறாளே, சூர்யாவைப் பத்தி ஒன்னும் கேக்கலையேன்னு நினைக்காதீங்க. சூர்யாவை நான் ஒரு வேலைக்காக திருச்சிக்கு அனுப்பப் போறேன். நடுவில வந்து உங்களைப் பார்த்துட்டுப் போவான். சரியா?"

"ஓ' தாராளமா உங்கூட வந்து தங்கறேன். எனக்கு எந்த ஆட்சேபணையுமில்லை. ஆனா ஒரே ஒரு நிபந்தனை. அத நீ ஒத்துக்கிட்டா நான் உங்கூட வர்றேன்".

"சொல்லுங்க சித்தி. எதாயிருந்தாலும் நான் ஒத்துக்கறேன்"

"மது நீ என்னை இனிமே 'அம்மா'ன்னு கூப்பிடுறதா இருந்தாம் நான்

உங்கூட வருவேன்''

கேட்ட மதுவின் கண்களிலிருந்து கண்ணீர் கரை புரண்டு ஓடியது.
ஓடிச்சென்று கமலாவை ''அம்மா'' என்று கட்டிக்கொண்டாள். கமலாவும்
''மது! என் செல்லமே!'' என்று மகளை இறுகத் தழுவினாள்.

## 10

வருடங்களும் மிக வேகமாக ஓடின. மதுராவும் எம்.டி.
கைனகாலஜி முடித்துவிட்டு ஸ்ரீனிவாசன் நர்ஸிங்
ஹோமிலேயே கைனகாலஜிஸ்ட்டாகி சேர்ந்து விட்டாள்.
அன்று கமலாவிடம் கூறியபடி ஹாஸ்டலை விடுத்து
ஆஸ்பிடல் பக்கத்திலேயே நல்ல வசதிகள் நிறைந்த ஒரு
வீட்டை வாடகைக்குப் பார்த்துக்கொண்டு கமலாவுடன்
குடியே றினாள். ஆஸ்பிடலுக்கு வந்தவுடன் கண் தெரியாத கமலா
வைப் பார்த்துக் கொள்ள ஆஸ்பிடலில் வேலை பார்க்கும் தாயம்மாவின்
மூத்த மகள் அஞ்சலையையும் வீட்டில் வேலைக்கு வைத்துக்கொண்டாள்.

சூர்யாவையும் நினைத்தபடி 'டீ அடிக்ஷன்' கேம்ப்பில் சேர்த்து விட்
டிருந்தாள். சூர்யாவும் மிகவும் நல்ல முறையில் குணமடைந்து வந்தான்.
சூர்யா நன்றாக குணமடைந்தவுடன் அவனுக்கு ஒரு 'எஸ்.டி.டி' பூத்துடன்
கூடிய பால்கடை ஒன்று வைத்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்திருந்
தாள்.

கமலாவிடம் சொன்னபடியே சூர்யாவை மாதத்திற்கு ஒரு முறை வீட்
டிற்கு அழைத்து வரச் செய்திருந்தாள். ஷ்யாம், அவள் எம்.டி. முடிக்கட்
டும். அதற்குள் சூர்யாவும் பூரண குணமடைந்து விடுவான். பிறகு மெல்ல
மதுவிடம் திருமண பேச்சை எடுக்கலாம் என்று நினைத்திருந்தான்.

இதற்கிடையில் மது கமலாவை நகரின் சிறந்த கண் மருத்துவம
னைக்கு அழைத்துச் சென்றுக் காண்பித்தாள். டாக்டர்கள் பரிசோதித்து
விட்டு கமலாவின் இரத்த அழுத்தமும், சர்க்கரை நோயும் கண்ட்ரோலுக்கு
வந்த பிறகு ஒரு ஆபரேஷன் செய்தால் ஒரு வேளை பார்வை திரும்பக்
கிடைத்தாலும் கிடைக்கலாம் என்று கூறினர். ஆனால் மதுரா நம்பிக்
கையை இழக்கவில்லை. எப்படியும் கமலாவிற்குப் பார்வையை வரவ
ழைத்து விட வேண்டும் என்பதையேக் குறிக்கோளாகக் கொண்டிருந்தாள்.

இரத்த அழுத்தத்திற்கும், சர்க்கரை நோய்க்கும் மருந்து கொடுத்து
வந்தாள். இது போதாதென்று ஆபரேஷன் செய்வதற்கு உடல் தெம்பாக
இருக்க வேண்டுமென்று வைட்டமின் மாத்திரைகளும் கொடுத்து வந்தாள்.

ஷ்யாம் தினமும் காலையில் ஆஸ்பிடல் வந்தவுடன் மதுராவைப்
பார்த்துவிட்டு அவளிடம் சிறிது நேரம் அளவளாவிக் கொண்டிருந்துவிட்
டுப் பிறகுதான் செல்வான்.

திருமணப் பேச்சை எடுத்தால் எங்கே எதிர்மறையாக எதுவும் சொல்
லிவிடப் போகிறாளோ என்ற பயத்திலேயே அதைப்பற்றி பேசாமலிருந்
தான். ஸ்ரீனிவாசனும் இதைப்பற்றி பலமுறை ஷ்யாமிடம் கேட்டுப் பார்த்து
விட்டார்.



''என்னப்பா எவ்வளவு நாள்தான் இப்படியே இருப்ப. எனக்கும் வய
சாயிட்டு வருதில்லையா? உனக்கு கல்யாணத்த செஞ்சு வெச்சு பேரப்பிள்
ளைகளைப் பார்க்க வேண்டாமா? மதுராதான் நெனச்சபடி படிப்ப முடிச்
சுட்டா. எதிர்பாராத விதமா தம்பியும் தங்கையும் இப்படி ஆயிட்டாங்க.
அத ஒண்ணும் இப்போ சரி பண்ண முடியாது. இப்ப ஒண்ணும் இல்லையே.
இப்போ திருமணத்திற்கு தடை சொல்ல அவளிடம் ஒரு காரணமும் இல்
லையே. நீ போய் அவளைக் கேக்கறியா? இல்ல, நானாப் போய்க் கேட்கட்
டுமா?''

''ஐயோ, டாடி! நீங்க கேக்க வேண்டாம். நானே கேட்டுக்கறேன். அவ
ரொம்ப சென்சிடிவ் டாடி. அவகிட்ட எப்படி கேக்கணும்னு எனக்குத்தான்
தெரியும். நீங்க ஏன் கவலைப்படறீங்க? எங்க கல்யாணம் கண்டிப்பா கூடிய
சீக்கிரம் நடக்கும்.''

ஸ்ரீனிவாசனுக்கு வயதாகி விட்டதால் ஆஸ்பிடலுக்கு வருவது எப்
பொழுதாவது ஒரு நாள் என்றாகி விட்டது. அப்படி ஆஸ்பிடல் வரும் தினங்
களில் பக்கத்தில் உள்ள மதுராவின் வீட்டிற்குச் சென்று கமலாவைப் பார்த்து
வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

ஷ்யாமிற்கு தந்தையிடம் பேசியதிலிருந்து எப்படியாவது மதுரா
வைக் கேட்டுவிட வேண்டும் என்ற எண்ணம் தோன்றியிருந்தது. அதற்
கான சந்தர்ப்பம் வரும் போது கண்டிப்பாக கேட்டுவிட வேண்டும் என்று
முடிவு செய்தான்.

''மது இன்னிக்கு உங்கிட்ட இதப்பத்தி கேட்டே ஆகணும்னு வந்தி
ருக்கேன். சுத்தி வளைக்காம கேக்கறேன். இனிமேலாவது நம்ப கல்யாணத்
தப் பத்திக் கொஞ்சம் நெனச்சுப் பாக்கறியா?''

மதுவிற்கு என்றேனும் ஒரு நாள் கண்டிப்பாக ஷ்யாம் கேட்டு விடு
வான் என்பது தெரிந்திருந்தது. சூர்யாவையும் நித்யாவையும் இனி காரணம்
காட்ட முடியாது. ஆனால் கமலாவிற்குப் பார்வை வந்தவுடன் செய்து
கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைத்ததோடில்லாமல்
ஷ்யாமிடமும் மிகவும் இதமாக தான் கல்யாணத்திற்குத் தயார் நிலையில்
உள்ளதை எடுத்துக் கூறினாள். அப்படியே கமலாவின் ஆபரேஷன் நல்லப
டியாக முடிந்ததும் கல்யாணத்தை வைத்துக் கொள்ளலாம் என்றும் கூறி
னாள்.

ஷ்யாம் இதை எதிர்பார்த்திருந்தான் என்றாலும் அவள் கல்யாணத்
திற்கு தயார் என்று கூறியதே பெரிய புதையல் கிடைத்த மாதிரி உணர்ந்
தான். பிறகுத் தன் தந்தையிடமும் சென்று நடந்ததைக் கூறினான்.

ஆனால் ஸ்ரீனிவாசன் இதை இப்படியே விடக்கூடாது என்று நினைத்
துக் கொண்டு வேறு ஓர் உத்தியைக் கையாள வேண்டும் என்று நினைத்துக்
கொண்டார்.

அதன்படி மறுநாள் ஷ்யாம் கிளம்பி ஆஸ்பிடல் சென்றவுடன் டிரை
வரிடம் சொல்லி தனது காரை நேரே மதுராவின் வீட்டிற்கு விடச் சொன்
னார்.

வழக்கம் போல மது கிளம்பிச் சென்றதும் கமலா குளித்துவிட்டு
இறைவனுக்கு மலர்களை வைத்துவிட்டு வாசிலில் வந்து அமர்ந்திருந்
தார். ஸ்ரீனிவாசனும் சரியாக அந்த நேரத்திற்குப் போய்ச் சேர்ந்தார். வழக்க
மான க்ஷேம லாபங்களை விசாரித்த பிறகு மெல்ல பேச்சை ஆரம்பித்தார்.
"கமலம்மா, உங்களிடம் முக்கியமான விஷயம் ஒன்று பேச வேண்
டும். அதுக்குத்தான் நான் முக்கியமா கிளம்பி வந்தது."
"சொல்லுங்க டாக்டர். என்ன விஷயம் பேசணும்?"
"எவ்வளவு நாட்கள் இப்படியே மதுராவ தனியாவே விட்டு வைக்
கப்போறீங்க? அவளுக்கு ஒரு கல்யாணத்தை செய்து வைக்க வேண்
டாமா?"
"நானும் அதப்பத்திதான் ரொம்ப நாளாவே யோசிச்சிட்டிருக்கேன்.
ஆனா அவ மனசுல என்ன இருக்குன்னு தெரியல.
இந்தப் பேச்சை எடுத்தாலே பிடி கொடுத்துப் பேச மாட்டேங்கறா.
டாக்டர் ஷ்யாமும் அவளும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பறாங்கன்னு எனக்
குத் தெரியும். ஆனா ஏன் கல்யாணத்தை மட்டும் ஒத்திப் போடறான்னு
எனக்குப் புரிய மாட்டேங்குது. ரொம்ப வற்புறுத்தவும் என்னால முடியல"
கமலா இவ்வாறு கூறவும் ஸ்ரீனிவாசன் மதுராவின் மனதிற்குள் என்ன
இருக்கிறது என்று எடுத்துச் சொன்னார். இவ்வளவு நாட்கள் நித்யா, சூர்யா
வுக்கு என்று சொன்னவள் இப்பொழுது கமலாவின் ஆபரேஷனுக்காக தள்
ளிப்போடுகிறாள் என்று தன்னிடம் ஷ்யாம் கூறியதையும் சொன்னார்.
கேட்ட கமலாவின் உள்ளம் மிகவும் நெகிழ்ந்து விட்டது. பிறகு ஸ்ரீனி
வாசனிடம் அடுத்த நாள் சாயங்காலம் மதுரா வீட்டிலிருக்கும் சமயத்திற்கு
ஷ்யாமையும் அழைத்து வருமாறு கூறினார்.
மதுரா வந்தவுடன் அதைப்பற்றி ஒன்றுமே பேசவில்லை. இரவு இரு
வரும் உணவை முடித்துக்கொண்டு உறங்கச் சென்றனர்.
மறு நாள் மதுரா கிளம்பும் சமயத்தில் கமலா அவளை அழைத்தார்.
"மதுக்கண்ணு, இன்னிக்கு ஆஸ்பிடலிலிருந்து கொஞ்சம் சீக்கிரம்
வறியா?"
"என்னம்மா எதுக்கு சீக்கிரம் வரணும்? எங்கேயாவது வெளியில
போகணுமா?"
"இல்லம்மா, உங்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும். அது
வும் இன்னிக்கே பேசணும். நீ சீக்கிரம் வருவியா? மாட்டியா?"
"சரிம்மா நீங்க இவ்வளவு சொன்னப்புறம் நான் வராம இருப்
பேனா? கண்டிப்பா சீக்கிரம் வரேன். வரட்டுமா?"
சொன்னபடியே மதுரா சாயங்காலம் சீக்கிரம் கிளம்பி வந்தாள். வந்
தவுடன் நேரே கமலாவின் அறைக்குச் சென்று அங்கே கமலா இல்லாத
தால் தோட்டத்திற்கு வந்தாள். அங்கே கமலா கன்னத்தில் ஒரு கை ஊன்றி
யபடி வருத்தமாக அமர்ந்திருப்பதைப் பார்த்துவிட்டு அருகில் வந்து கேட்
டாள்.
"அம்மா, நீங்க சொன்ன மாதிரி சீக்கிரம் வந்துட்டேன். ஆமாம். ஏன்



நீங்க ரொம்ப வருத்தமா இங்கே வந்து உட்கார்ந்திருக்கீங்க?"
"மது, எனக்கு இனிமே உன்னைப் பிரிக்கவே முடியாதுங்கறத
நெனைச்சாத்தான் ரொம்ப வருத்தமா இருக்கும்மா"
"எம்மா, அப்படி சொல்றீங்க? அதான் டாக்டர்கள் எல்லாம் ஆபரே
ஷன் செஞ்சா சரியாயிடும்னு சொல்றாங்க இல்ல. நானும் உங்களுக்குப்
பார்வை வரும் வரை ஓய மாட்டேம்மா. நீங்க அதைப் பத்தின கவலையை
விடுங்க"
"நான் ஆபரேஷனுக்கு சம்மதிச்சாத்தானே இதெல்லாம் நடக்கும்?
நான் சம்மதிக்கலைன்னா?"
மதுவிற்கு கமலா கூறியது புரியவில்லை.
"எம்மா, என்னம்மா ஆச்சு உங்களுக்கு" ஏன் ஆபரேஷனுக்கு சம்ம
திக்க மாட்டீங்க?"
"முதலில் எம் பொண்ணோட கல்யாணம் நடக்கணும். அந்தக்
கொட்டு மேளச் சத்தத்தை என் காதார கேட்டு நான் திருப்திபடணும்.
அதுக்கப்புறமாத்தான் இந்த ஆபரேஷன் எல்லாம். இது நான் ரொம்ப சீரிய
ஸாகவே சொல்றேன். ஆமாம். நீ வேற என்ன சமாதானம் சொன்னாலும்
நான் கேட்க மாட்டேன். இந்த அம்மா சொல்றத எம் பொண்ணு நீ கேட்டுத்
தான் ஆகணும். இல்லன்னு சொன்னா நான் இப்படியே இருந்துக்கறேன்."
மதுவிற்கு கமலா ஏன் இப்படி பேசுகிறார் என்று முதலில் புரிய
வில்லை. பிறகு அங்கு வந்த ஸ்ரீனிவாசனையும், ஷ்யாமையும் பார்த்தவு
டன் விவரம் விளங்கியது.
ஷ்யாமை கோபம் கலந்த பார்வையால் நோக்கினாள். பின் ஷ்யாமின்
குறும்பு கலந்த பார்வையை சந்திக்க முடியாமல் ஸ்ரீனிவாசனைப் பார்த்
தாள்.
"என்னம்மா, மது, என்ன உங்கம்மா இப்படி சொல்றாங்கன்னு
பார்க்கறியா? நேத்து எங்கிட்ட கூட அப்படித்தான் சொன்னாங்க. அதனால
வேற வழியில்லை. நீ இந்த ஷ்யாம் பையனைக் கட்டிக்கிட்டுத்தான் ஆக
ணும் புரிஞ்சுதா?"
மதுவிற்கு பெரியவர்கள் எல்லாம் பேசி வைத்துக்கொண்டு தன்னை
நன்றாக மடக்கிவிட்டார்கள் என்பது தென்னத் தெளிவாகத் தெரிந்தது.
"மது இந்த அம்மாவோட ஆசைக்கு நீ சம்மதம்னு சொல்ல மாட்
டியா? பேசாம இருந்தா என்னம்மா அர்த்தம்?"
"மௌனம் சம்மதம்னு அர்த்தம்மா" என்று கூறிய மதுவின் கன்னம்
வெட்கத்தால் செவேல் என்று சிவந்தது.
"அம்மா மது! எனக்கு ஒரு ஜூனியர் கைனகாலஜிஸ்ட் உடனே
வேணும்மா" என்று ஸ்ரீனிவாசன் கேட்டதும் ஒரு கணம் புரியாமல் விழித்த
மதுரா, பிறகு புரிந்தவுடன் வெட்கத்துடன் உள்ளே ஓடினாள்.
அங்கு ஒரு சிரிப்பலை மெல்ல எழுந்தது.

முற்றும்